பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 03 திங்கட்கிழமை 21.08.2023 கதிர் 283

# அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் புதிய கூட்டணி; புதிய சின்னம்

## சுதந்திர மக்கள் சபை திடீர் அறிவிப்பு

ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தி பரந்துபட்ட புதிய கூட்டணியொன்று புதிய இலச்சினையுடன் உருவாக்கப்படவுள்ளதாக சுதந்திர மக்கள் சபை அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலை மையப்படுத்தி பரந்துபட்ட கூட்டணியை அமைக்கும் சுதந்திர மக்கள் சபையின் முதலாவது மக்கள் மாநாடு நேற்றுத்தறையில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அதன் தலைவர் டலஸ் அழகப்பெரும, டிலான் பெரேரா, காலாநிதி.சரித்த ஹேரத் ஆகியோர் தெரிவித்தனர். அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு,

டலஸ் அழகப்பெரும, கூறுகையில், ஜனாதிபதி ரணிலின் யோசனைகள் அகலமானவை. அதனால் தான் அவருடைய காற்சட்டை எப்போதுமில்லாது நழுவி விழப்பார்க்கின்றது. பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒரு ஆசனமே இருந்தது. அது பாராளுமன்றத்தில் 0.5சதவீதமாகும்.

அதேபோன்று ஜனாதிபதியொருவருக்கு நாட்டின் மொத்த வாக்குகளில் 51சதவீதம் காணப்பட வேண்டும். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 32ஆயிரம் வாக்குகளே கிடைத்தது. அந்த வாக்குகளால் அவரால் நாடாளுமன்ற உறுப்புப்பினராகக் கூட வரமுடியவில்லை. அந்த வாக்குகளின்பிரகாரம் வெறும் 9.6 தவீதமான வாக்குகளே கிடைத்துள்ளன.

ஆகவே இந்த நிலைமைகள் நீடிப்பதற்கு இடமளிக்க முடியாது. பொய்யான ஆட்சியை, மக்கள் அங்கீகாரமற்ற ஆட்சியை முன்னெடுப்பதற்கு இடமளிக்க முடியாது. ஆகவே அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒரு அணியின் கீழ் வரவேண்டும். அவ்வாறான செயற்பாடுகளை நாம் முன்னெடுத்து பரந்துபட்ட கூட்டணியை அமைக்கவுள்ளோம் என்றார்.

டிலான் பெரேரா கூறுகையில், ஜனாதிபதி தேர்தலுக்காக பட்டர் கேக் தயாரிப்பதில் பயனில்லை. ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் பட்டர் கேக்குகளை தயாரித்து முன்னிறுத்த தயாராகியுள்ளன. ஆனால் நாம் ஐசிங் கேக்கை தயாரித்துள்ளோம். அது தான் டலஸ். அவருடைய தலைமையில் ஜனாதிபதி தேர்தலில் புதிய பரந்து பட்ட கூட்டணி அமைக்கப்படவுள்ளதோடு, புதிய இலச்சினையில் போட்டியிடவும் உள்ளோம் - என்றார். 2

## இது ரகசியம் அல்ல!

இலங்கையில் சிங்கள பௌத்த மேலாதிக்க வாதத்தை நிலை நிறுத்துவதில் அரசியல்வாதிகளுக்கு நிகராக அல்ல அதற்கும் மேலாக பங்களிப்பை வழங்குபவர்கள் சிங்கள அதிகார வர்க்கத்தினரே. அதாவது அரச அதிகாரிகளே. அவர்களில் பலரும் மெல்லக் கொல்லும் விசம் போல உள்ளிருந்தே ஆர்ப்பாட்டம் இல்லாமல் அறுக்கிறார்கள். சில சமயங்களில் அரசியில் அழுத்தங்கள் காரணமாக அரசியல்வாதிகள் தற்காலிக விட்டுக்கொடுப்புகளுக்கு வந்தாலும் கூட இவர்கள் அதைத் தாண்டியும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதில் குறியாக இருப்பார்கள். அதற்கான ஒரு சிறந்த உதாரணம் தற்போது நடந்துகொண்டிருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் நிலத்தில் வனவளம் பிடித்து வைத்துள்ளதாக மாவட்டச் செயலகம் கோரிய 2



## இரு நாள் பயணமாக ரணில் சிங்கப்பூருக்கு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருநாள் விஜயமாக இன்று சிங்கப்பூர் செல்லவுள்ளார்.

இந்தப் பயணத்தில். சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலீமா யெகோப்பைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதோடு, சிங்கப்பூர் பிரதமர் லீ சியேன் லூங், சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் நெங் ஹெங் ஹென், நிலைபேறு மற்றும் சுற்றாடல் அமைச்சர் கிரேஸ் பூ ஹாய் இயன் ஆகியோருடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

பாரிஸ் உடன்படிக்கையின் 6ஆவது உறுப்புரை, சர்வதேச கார்பன் வர்த்தகத்தின் கீழ் பசுமை வீட்டு வாயு வெளியேற்றத்தை மட்டுப்படுத் தும் நோக்கத்துடன் குறைந்த செலவில் ஒத்துழைப்புக்களை பரிமாறிக்கொள்ள இரு நாடுகளுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சிங்கப்பூர் பிரதமருக்கும் இடையிலான கலந்துரையாடலின் பின்னர் பெரிஸ் உடன் படிக்கைக்கு அமைவாக கார்பன் சீர்ப்படுத்தல் தொடர்பில் இலங்கை மற்றும் சிங்கப்பூர் அரசாங்கங்களுக்கு இடையிலான ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. 2

## பதில் அமைச்சர்கள் நால்வர் நியமனம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பயணத்தை முன்னிட்டு நேற்று இருதினங்கள் அமுலாகும் வகையில் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்பிரகாரம், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் பாதுகாப்பு பதில் அமைச்சராகவும், நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தொழில்நுட்ப பதில் அமைச்சராகவும், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனூப பெஸ்குவல், சிறுவர், மகளிர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சுற்றுலாவிகள் எண்ணிக்கையை இரண்டு மடங்காக்கவேண்டும்

### ஜனாதிபதி யால காட்டில் தெரிவிப்பு

இந்த நாட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டும். மேலும், சுற்றுலா மூலம் பெறப்படும் வருமானத்தை நான்கு முதல் ஐந்து மடங்குகளாக அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஹில்டன் ஹோட்டல் குழுமத்தின் அதி சொகுசு ஹோட்டலை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த யால பிரதேசத்தில் உயர்தர சொகுசு ஹோட்டலை திறந்து வைப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இதன் மூலம் அதிக நுகர்வுத் திறன் கொண்ட சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்க முடியும் என்பதோடு, முன்னேற்றத்திற்கான வாய்ப்பும் உருவாகும். அதற்காக, மெல்வா மற்றும் ஹில்டன் குழுமத்திற்கு நன்றி.

யால பிரதேசத்தில் சிதுல்பவ்வ மற்றும் ஆகாச சைத்திய என்ற இரண்டு புராதன வழிபாட்டுத் தலங்கள் இருந்துள்ளன. அவை இங்கிருந்த செழுமையையும் ஒற்றுமையையும் பிரதிபலிக்கின்றன.

சுற்றுலாத்துறையை ஊக்குவித்து அதை முன்னோக்கி 2

## கறுப்புப் பட்டியலில் 120 மருத்துவர்கள்

நாட்டைவிட்டு வெளியேறிய 120 விசேட வைத்திய நிபுணர்கள் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குச் சென்று பணிக்குத் திரும்பாத வைத்திய நிபுணர்களே இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

2022 ஜனவரி 9 2

## நாணய நிதிய உடன்படிக்கையில் 37 வீதம் மட்டுமே நிறைவேற்றம்

### 2 வீதம் பின்தங்கியுள்ளது இலங்கை

இலங்கை ஆளும் தரப்பு சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட உடன்பாடுகளில் 35 சதவீதமானவற்றையே நிறைவேற்றியுள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன்வசதி இலங்கைக்குவழங்கப்பட்டுள்ளநிலையில் அதன் உடன்பாடுகளை இலங்கை நடைமுறைப்படுத்தியுள்ளமை தொடர்பில்மேற்கொண்ட ஆய்வின் போதே மேற்கண்ட தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த ஆய்வில், இலங்கை ஏற்படுத்திக்கொண்ட உடன்பாடின்படி, கடந்த ஜூலை மாதத்திற்குள் திட்டத்தின் நிபந்தனைகளில் 57 வீதம் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டிய நிலையில், 35சதவீதம் மட்டுமே பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

இதன்படி, சர்வதேச நாணய நித்தியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கால அளவின்படி இலங்கை முன்னேற்றம் அடையவில்லை. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாவது மீள் பரிசீலனைக்கு முன்னதாக இலங்கை அரசாணைக்கும் 71சதவீதமான நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும். 2

## இந்தியப் பயணத்தின் பயனாய் அதிகளவில் சுற்றுலாப் பயணிகள்

### வருகை என்கிறார் சுற்றுலாத்துறை அமைச்சர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின் பயனாக இந்தியாவிலிருந்து அதிக சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகை தருகின்றனர் என்று சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஹில்டன் ஹோட்டல் குழுமத்தின் அதி சொகுசு ஹோட்டல் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனால் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத்தர ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதியின் இந்திய சுற்றுப் பயணத்தின் பலனாக இந்தியாவிலிருந்தே 2



## நிதிய உடன்படிக்கையில் 80 சதவீதம் பூர்த்தியாம்



சர்வதேசநாணயநிதியத்துடன் எட்டப்பட்ட உடன்படிக்கைகளில் 80சதவீதமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேசநாணயநிதியத்துடன் எட்டப்பட்ட உடன்படிக்கைகளை நாம் அர்ப்பணிப்புடன் நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அந்த வகையில் தற்போது வரையில் 80சதவீதமானவை நடைமுறையில் உள்ளன.

அத்துடன், கடந்த காலத்தில் 3ஆயிரம் வரையிலான பொருட்களில் இறக்குமதிகளை நாம் தடைசெய்திருந்தோம். இந்த நிலைமையைதொடரமுடியாது. நாம்படிப்படியாக இறக்குமதி தடைகளை நீக்கவுள்ளோம்.

மேலும், இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதம் மூலம் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாக சில பிரசாரங்கள் உள்ளன. அவ்விதமான நெருக்கடிகள்ஏற்படப்போவதில்லை என்றார்.

## ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஒரு குழு ஐ.தே.கவுக்கு தாவும்

### நாமலின் எதிர்வுகூறல் இது



ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஒரு குழுவினர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொள்ளவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு வடக்கு தொகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியினர் ரணில் விக்கிரமசிங்கவை தூற்றி வருகின்ற இந்த தருணத்தில் அந்த அணியில் இருந்து குழுவொன்று ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையவுள்ளது.

அதேநேரம், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ராஜபக்ஷக்கள் ஆதரவு அளித்தால் அவர் கெட்டவராக பிரசாரம் செய்யப்படுகின்றார். அதேநேரம், பிரேமதாசவுக்கு பிரதமர்பதவிதருவதாககூறிஇணக்கப்பாடு எட்டப்பட்டதன் பின்னர் அவர் ரணிலுடன் இணைந்து ரணில் பிரேமதாச ஆகியவுடன் அவர் நல்லவராக மாறிவிடுகின்றார்.

ஆகவே, இந்த விடயத்தினை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். பொதுஜனபெரமுன கடந்த காலத்தில் அனைத்து தேர்தல்களிலும் வெற்றிகண்டுள்ளது. அவ்வாறான நிலையில் மக்கள் எதிர்பார்க்கும் தலைமையை உரியவாறு வழங்கும் - என்றார்.

## நல்லூரானுக்கு இன்று காலை கொடியேற்றம்



நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. நேற்று மாலை வைரவர் சாந்தி இடம்பெற்றதைத் தொடர்ந்து திருவிழா தொடங்குவதற்கான எல்லா ஏற்பாடுகளும் நிறைவுபெற்றுள்ளன.

25 நாட்கள் இடம்பெறும் நல்லூர்க் கந்தன் திருவிழாவின் கொடியேற்றம் காலை 10 மணிக்கு இடம்பெறும். ஓகஸ்ட் 30 மாலை 5 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் செப்டெம்பர் 5 மாலை 5 மணிக்கு கார்த்திகை உற்சவமும் செப். 11 மாலை 5 மணிக்கு ஒரு முகத் திரு விழாவும் செப். 12 மாலை 5 மணிக்குச் சப்பைரதத் திருவிழாவும் மறுநாள் செப். 13 காலை 7 மணிக்கு 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
20 ஆயிரத்து 543 கெக்டேயரில் 9 ஆயிரத்து 311 கெக்டேயரை விடுவிக்க வனவளத் திணைக்களம் இணங்கியது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 1985க்கு முற்பட்ட காடுகளுக்குத் திரும்புவோம் என்கிற கொள்கை முடிவின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மற்றும் வவுனியாமாவட்டத்தில்மக்களிற்குசொந்தமான தனியார் காணிகளையும் பிரதேசசெயலாளரின்ஆளுகையில் இருந்த அரச காணிகளையும் எவரின் அனுமதியோ அல்லது முன்னறிவித்தலோ இன்றி வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டு அபகரித்தமை தொடர்பில் கடந்த 12 ஆண்டுகளாக எழும் பிரச்சினைக்கு தீர்வுகான அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரை தொடர்பில்அண்மையில்முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர், வனவளத்திணைக்கள அதிகாரிகள், ஜனாதிபதி செயலக அதிகாரிகளுடன் ஒரு கூட்டம் நடந்தது

இதற்கமைய முல்லைத்தீவில் 9 ஆயிரத்து 311 கெக்டேயர் அல்லது 29 ஆயிரம் ஏக்கர் நிலங்களை விடுவிப்பு செய்ய இணக்கம் தெரிவித்த வனவளத் திணைக்களம் மேலம் 17 ஆயிரம் கெக்டேயர் தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையிலான தேசிய குழுவிற்கு சமர்ப்பிப்பித்து அவர்களின் அறிவுறுத்தலிற்கு அமைய முடிவை எட்டுவதாகத் தெரிவித்தனர்.

இதன்போது மாவட்டச் செயலகத்தின் கோரிக்கையின் பெயரில் தேசியகுழுவிற்குபரிந்துரைக்கும்17 ஆயிரம்கெக்டேயரையும்மீண்டும் பார்வையிட்டு அங்கே மக்களின் வாழ்விட அடையாளம் பரீட்சிக்க கோரினர். இதற்கு இரு கிழமை கால அவகாசத்தில் ஆராய்ந்து இரு கிழமை ஆராய்ந்து அதன் பின்பும் ஓர் கூட்டத்தில் முடிவை அறிவிப்பதாக இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் முல்லைத்தீவில் 1985 ஆம் ஆண்டிற்கு முன்பு 88 ஆயிரத்து 671 கெக்டேயர் காடே காணப்பட்டுள்ளது. அது மாவட்டத்தின் மொத்த அளவில் 36.72 வீதமாக உள்ள நிலையில் 2009இற்கு பின்பு 84, ஆயிரத்து 664 கெக்டேயர் நிலம் வனவளத் திணைக்களம் தனது காடாக அறிவித்துள்ளது. இது மாவட்டத்தின் 35.06 வீதமாகும். இந்த நிலையில் தற்போது விடுவிக்க இணக்கம் தெரிவிக்கும் 9 ஆயிரத்து 311 கெக்டேயர் நிலம் 3.86வீதமாகவும்தேசியகுழுவிற்கு சமர்ப்பிக்கும் 11 ஆயிரத்து 232 கெக்டேயரும் 4.65 வீதமான நிலமாகவே காணப்படுகின்றது.

இதேநேரம் மாவட்டத்தில் புதிதாக வர்த்தமானி அறிவித்தல் செய்ய வனவளத் திணைக்களம் பரிந்துரை செய்துள்ள 11 ஆயிரத்து 798.கெக்டேயர் நிலானது 4.89 வீதமாகவுள்ள நிலையில் இது தொடர்பில் அடுத்த கூட்டத்தின் பின்பு ஆராய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தத்தில் ஒரு பக்கத்தில் காணிகளை விடுவிப்பதாகக் காட்டிக்கொண்டு மறு பக்கத்தில் அவற்றை மீண்டும் அரங்கேற்றி மத்திய அரசின் சொத்தாக்குவதில் தீவிரமாக இருக்கிறார்கள் அதிகாரிகள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடனடியாக 20 ஆயிரத்து 543 கெக்டேயர் நிலம் வனவளத் திணைக்களத்தினால்விடுவிக்கப்பட வேண்டும் என மாவட்டச் செயலகம் கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால் 11 ஆயிரத்தை விடுவித்து விட்டு மீண்டும் 11 ஆயிரத்தை பிடித்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார்கள். நான் தொடக்கத்திலேயே சொன்னது சரிதானே வாசகர்களே!

**- இடிமின்னல் -**
(idiminnal23gmail.com)

## சுற்றுலாவிகள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டுசெல்வதே எமது நோக்கமாகும். அதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமானது.

இந்த யால பிரதேசத்தை சுற்றுலா பிரதேசமாக அபிவிருத்தி செய்யும் போது ஒரு வலயமாக அபிவிருத்தி செய்ய வேண்டும். உடவலவ, குமண போன்ற பகுதிகள் ஒன்றோடொன்று தொடர்புபட்டதாகவே அமைந்துள்ளன. உடவலவயானைகள்தடம், குமண வரையில் நீண்டுச் செல்கிறது.

மேலும், இப்பகுதிகளுக்குவரும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான வசதிகளையும் மேம்படுத்த வேண்டும். இந்த யால பிரதேசத்தின் அபிவிருத்திக்கான திட்டத்தை முன்வைக்குமாறு வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுற்றுலா அமைச்சர் மற்றும் அந்த இரண்டு அமைச்சுகளின் அதிகாரிகளிடமும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு மேலதிகமாக, கல் ஓயா, மாதுருஓயா, சோமாவதிய, மின்னேரியா, வஸ்கமுவ போன்ற இடங்கள் குறித்தும் அவதானம் செலுத்த வேண்டும்.

சுற்றுலா பயணிகள் கொழும்பில் இருந்து படகில் ஏறி புத்தளம் வந்து ஓரிரு நாட்கள் வில்பத்துவில் தங்கிவிட்டு திரும்பும் வகையில் வசதிகளை மேம்படுத்த வேண்டும். மேலும், சுற்றுலா பயணிகளுக்கு புதிய அனுபவத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் வனவிலங்கு பாதுகாப்பு பிரதேசங்களை கட்டமைக்கும் வசதிகளும் உள்ளன.

இந்தியா, நேபாளம் செல்லும் போது இதுபோன்ற இடங்களைப் பார்க்கலாம். அவற்றை கருத்தில் கொண்டு சுற்றுலாத்துறையை மேம்படுத்த புதிய திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

இந்த நாட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டும். மேலும், சுற்றுலா மூலம் பெறப்படும் வருமானத்தை நான்கு முதல் ஐந்து மடங்குகளாக அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

1981 இல் மாலைத்தீவுக்கான எனது சுற்றுப் பயணத்தின் போது, சுற்றுலாப்பயணிகளின்மூலம்அந்த நாட்டின் வருமானம் குறைவாகவே காணப்பட்டது. அக்காலத்தில் இலங்கைக்குவருவதைவிடவும்குறைந்த அளவான சுற்றுலாப் பயணிகளே அங்கு வருகை தந்தனர். இன்று நம் நாட்டிற்குவருகைத்தரும்அளவிற்கு நிகராக, 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் மாலைத்தீவிற்கும் செல்கிறார்கள்.

நாம் ஒரு சுற்றுலாப் பயணியிடம் 200 அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொள்ளும் போது, மாலத்தீவுகளில் 700 டொலர்கள் வரையில் அறவிடப்படுகிறது. எனவே நாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு இந்நாட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையும் அறவீட்டுத்தொகையும் அதிகரிக்கப்பட வேண்டும்.

நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதன் பின்னர், நாட்டைக்கடன் பொறியிலிருந்து மீட்டெடுப்பது மட்டுமன்றி வருமானத்தை ஈட்டுவதற்கான புதிய வழிகளைத் உருவாக்கும் பொறுப்பும் என்னைச் சார்ந்திருந்தது.

தொழிற்சாலைகள் மற்றும் விவசாயத் துறையில் வருமானம் ஈட்ட அதிக காலம் தேவைப்படும். ஆனால்சுற்றுலாத்துறையில்விரைவில் அந்த இலக்கை அடைய முடியும்.

அதனால் வருமானம் ஈட்டி, மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேநேரம் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும். இவ் வருட இறுதிக்குள் நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலா விடுதிகளிலும் சுற்றுலா பயணிகளால் நிரம்பி வழியும் அளவிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும். அதுவே தற்போதும் நடத்துகொண்டிருக்கிறது. அடுத்தவருடத்தில்சுற்றுலாப்பயணிகள் நிரம்பி வழிவதற்கு மேலதிகமாக அதனால் கிடைக்கும் வருமானத்தையும் இரட்டிப்பாக்கிக்கொள்ள முடியும்.

இந்த வருடம் கண்டியில் நடைபெறவுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தலதா பெரஹெர மற்றும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் காரணமாக இந்நாட்டில் உள்ள சுற்றுலா விடுதிகள் செப்டெம்பர் மாதத்தில் நிரம்பி வழிகின்றன.

உலகப் புகழ்பெற்ற கலைஞர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் கிறிஸ்மஸ் காலத்தில் இலங்கைக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கத்திய நாடுகளின் முக்கிய இசைக்கலை ஞர்களில் ஒருவரான ஆன்ட்ரே முச்சர் (Andrey Mucher) எதிர்வரும் ஜனவரி மாதம் இந்நாட்டிற்கு வருகை தரவுள்ளார் என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

காலி இலக்கிய விழா உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடைபெறுகின்றன. இதன் மூலம் அதிகளவான சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டிற்கு வரவழைத்து நாட்டுக்குத் தேவையான வருமானத்தை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

இதனை வருமான வழியாக பார்க்கும் அதேநேரம் வேலை வாய்ப்புக்கான களமாகமாகவும் மாற்ற வேண்டும். அதற்காக இளைஞர் யுவதிகளை அதிகளவில் பயிற்றுவிக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் தங்கள் எதிர்காலத்தை கட்டியெழுப்பும் அதேநேரம் மேற்படிச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியதும் அவசியமாகும்.

நாட்டின் சுற்றுலாத்துறையில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்த பல புதிய முன்மொழிவுகள் கிடைத்துள்ளன. அந்த வகையில், தங்களது வீடுகளில் அறைகளில் இரண்டினை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கி, உயர் வகையில் உபசரிப்புக்களைவழங்கிஅதனால் 100 டொலர்களை ஈட்டிக் கொள்ளும் இயலுமையை கொண்டிருந்தால் அந்தச் செயற்பாடுகளை முன்னோக்கிக் கொண்டுச் செல்வதற்கான உதவிகயை அரசாங்கம் வழங்கும்.

சுற்றுலாத் துறையின் இலக்குகளை அடைவதற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், குறுகிய கால வருமான வழிகள் மற்றும் வேலை வாய்ப்புகளைஉருவாக்குவதற்கான வளங்களை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கின்ற நிலையில், அதற்கு அனைவரினதும் ஆதரவு கிடைக்கும் என நம்புகிறேன் - என்றார்.

## இந்தியப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகசுற்றுலாப்பயணிகள்வருகைத் தருகின்றனர். மூன்றாவது பெரிய எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள்சீனாவிலிருந்துவருகை தருகின்றனர்.

அனைத்து விமான சேவை நிறுவனங்களும் இலங்கைக்கான விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளன. கட்டார் ஏயார்வேஸ் நிறுவனம்இலங்கைக்குநாளாந்தம் ஆறு விமான சேவைகளை முன்னெடுக்கிறது.

துருக்கி விமான சேவையும் இலங்கைக்கு விமான பயணங்களைமேற்கொள்வதோடு, சிங்கப்பூர் விமான சேவை வாரத்தில் ஏழு நாட்களும் நாட்டுக்கு விமானப் சேவையை முன்னெடுக்கிறது.

இஸ்ரேல் அகீரே விமான சேவை ஒக்டோபர் 31 ஆம் திகதியிலிருந்து வாரத்திற்கு இரு முறை இலங்கைக்காள நேரடி விமான சேவயை முன்னெடுக்கவிருப்பதாக அறிவித்துள்ளது. மேலும் பல விமான சேவைகளை அதிகரித்த எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கையிலிருந்து 80 விமான சேவைகள் வாராந்தம் இந்தியாவிற்குமேற்கொள்ளப்படுகின்றன.

இன்று சுற்றுலாத்துறையில் எதிர்கொண்டுள்ள சவாலை வெற்றிகொள்ள அனைவரும் ஒன்றுபட்டமைக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

ஹில்டன் ஹோட்டல் குழுமம் நுவரெலியாவிலும் நீர்கொழும்பிலும் அதி சொகுசு ஹோட்டல்களை விரைவில்திறக்கவுள்ளது. அதனால் இந்நாட்டின் சுற்றுலாத்துறைக்கு மிகப்பெரிய பங்களிப்பு கிடைக்கும்.

பல வருடங்களாக சுற்றுலாத் துறை குறித்து இலங்கையில் மேற்படி புதிய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதி பல புதியதிட்டங்களை அறவித்துள்ளார். அதனூடாக தற்காத்தில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்.

இந்தநாட்டிற்குவரும்சுற்றுலாப் பயணிகளில் 31சதவீதமானவர்கள் மீண்டும் மீண்டும் வருகை தருபவர்கள் என புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இலங்கை சுற்றுலாப் பயணிகளுக்கு இறுதி இலக்கான நாடாக அமைய வேண்டியதில்லை. ஆனால், உயர்ந்த நட்புறவும் விருந்தோம்பலும் கிடைக்கும் நாடாக இருக்க வேண்டும்.

இலங்கையில் தங்குவதற்கான விருப்பத்தினாலேயே முதலீட்டாளர்கள் பலரும் இங்கு முதலீடு செய்ய ஆரம்பித்துள்ளனர். எனவே இலங்கையில் கிடைக்கும் உயர் விருந்தோம்பலை தொடர்ச்சியாக வழங்க வேண்டும்.

ஜனாதிபதியின் மேற்படி வேலைத்திட்டங்களின் பலனாக இந்நாட்டின் சுற்றுலா வியாபாரத்தில் வெற்றியை ஈட்டிக்கொள்ளும் அதே நேரம் முன்னணி வருமானம் ஈட்டும்துறையாகசுற்றுலாத்துறையை மாற்றியமைக்க முடியும் - என்றார்.

## கறுப்புப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முதல் இந்த வருடத்தின் ஒகஸ்ட் 18 வரையான காலப்பகுதியில் 363 வைத்தியர்கள் வெளிநாட்டுப் பயிற்சிக்காகச்சென்றுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களில், 120 மருத்துவர்கள் மீண்டும் நாடு திரும்பவில்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

நாட்டின் 29 மயக்கவியல் நிபுணர்களில் 12 பேரும் நாடு திரும்பவில்லை.

கறுப்புப் பட்டியலில் உள்ள மருத்துவர்கள் நாடு திரும்ப முடியும் என்ற போதிலும் அவர்கள் சேவையில் ஈடுபடுவதானால், பொதுச் சேவை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்ய வேண்டும் என்று சுகா தார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## நாணய நிதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆளும் தரப்பு ஒகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் மாதத்திற்கு 18 நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது என்றுறுள்ளது.

## இரு நாள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர். எச்.எஸ்.சமரதுங்க ஆகியோரும் சிங்கப்பூர் சுற்றுப் பயணத்தில் இணைந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளைமேலும், ஜனாதிபதி வெளிநாட்டிலிருக்கும் காலப் பகுதியில் ஜனாதிபதியின் கீழுள்ள அமைச்சுக்களை கண்காணிப்பதற்காக பதில் அமைச்சர்கள் நால்வர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அடுத்த ஜனாதிபதித் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காலநிதி.சரித்த ஹேரத் தெரிவிக்கையில், நாட்டில் மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளை தற்போது ஏற்றுக்கொள்ளும் துரதிஷ்டமான நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

இந்தநிலைமைகள்நீடிப்பதற்கு இடமளிக்க முடியாது. இதனை மாற்றியமைக்க வேண்டும். அதற்காக அரச மாளிகைகளில் இருந்து எதனையும்செய்ய முடியாது. பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்து சாதிக்க முடியாது. அதனால் தான் நாம் மக்கள் முன்னிலையில் வந்துள்ளோம் - என்றார்.

## நல்லூரானுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேர்த்திருவிழாவும் செப். 14 காலை 7 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நல்லூர்க் கந்தனைத் தரிசிக்க பக்தியோடு திரள்வார்கள் என்பதால் ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதிகள் திருவிழாக் காலங்களில் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. கிழக்கே பருத்தித்துறை வீதியில் மாநகர சபை அலுவலகம் முன்பாக இருந்தும் மேற்கே அரசடிச் சந்தியில் இருந்தும் வடக்கே ஆலய வீதியில் சங்கிலியன் வீதிக்கு அருகிலும் தெற்கே ஆலய விதியில் இந்து மா மன்றச் சந்தியிலும் செட்டித் தெருவின் நடுப்பகுதியிலும் வீதி மறியல் இடப்பட்டு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பர்.

பருத்தித்துறை வீதியூடாகப் பயணிக்கும் வாகனங்கள் மாற்றுப் பாதையைப் பயன்படுத்தும்படி கேட்கப்பட்டுள்ளது.

# ‘மலையகத் தமிழ் மக்களின் 200 வருட வரலாறு’ முல்லையில் சிறப்புற்ற நூல் அறிமுக விழா



‘மலையகத் தமிழ் மக்களுடைய 200வருட வரலாறு’ எனும் நூல் அறிமுகவிழா, ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவில் சிறப்புற இடம்பெற்றது. கலாபூசணம் இரா. சுப்பிரமணியம்என்பவரால்எழுதப்பட்ட இந்த வரலாற்று நூலின் அறிமுகவிழா, முல்லைத்தீவு-புதுக்குடியிருப்புமத்தியகல்லூரிபொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

விருந்தினர் வரவேற்புடன் தொடங்கிய இந் நிகழ்வில், தொடர்ந்து மங்கலவிளக்கேற்றல் இடம்பெற்று, தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டதையடுத்து, நூல் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

அந்தவகையில்நூலினுடைய முதற்பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன், ஊடகநிறுவனமொன்றின்பணிப்பாளரான கந்தையா பாஸ்கரனிடம் கையளித்து நூல் அறிமுகத்தை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்துநிகழ்வில் விருந்தினர்களாகக்கலந்துகொண்ட ஏனையவர்களும்குறித்தநூலைப் பெற்றுக்கொண்டனர்.

அத்தோடு இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகளும்வழங்கிவைக்கப்பட்டன.

மேலும் இந் நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்புபிரதேசசபைஉறுப்பினர் ஆ.ஜோன்சன் ஆகியோர் கலந்துகொண்டிருந்ததுடன், பெருந்திரளான பொதுமக்களும் இந் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாவாப் பாக்குடன் இருவர் நேற்று கைது

கசிப்பு மற்றும் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இளைஞர்கள் இருவரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டை பகுதியில் நேற்று முற்பகல் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 1,500 மில்லி லீற்றர் கசிப்பு மற்றும் 21.45 கிராம் கஞ்சா கலந்த மாவா போதைப்பாக்கும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம்பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# ஆளை அடையாம் காண உதவ பொலிஸ் கோரிக்கை

மட்டக்களப்பில் மோட்டார் சைக்கிள் திருடினார் என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை அடையாளம் காண்பதற்கு உதவுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். சிசிரிவி கமெராவில் பதிவாகியுள்ள சந்தேகநபரின் காட்சிகளில் இருந்து அவரை அடையாளம் காண உதவுமாறே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை சந்தேகநபர் திருடிச் சென்றமை கமெராவில் பதிவாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒகஸ்ட் 2 குறித்த வீதியில் பல் சர் ரக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டுஹோட்டலுக்குசென்று உணவு சாப்பிட்டுவிட்டு உரிமையாளர் திரும்பி வந்தபோது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தது. அது குறித்து விசாரித்த பொலிஸார் சிசிரிவி காட்சிகளில் நபர் ஒருவர் அந்த மோட்டார் சைக்கிளைத் தள்ளிச் செல்வதைக் கண்டுபிடித்தனர்.

இவர் தொடர்பாக அடையாளம் தெரிந்தவர்கள் மட்டு.தலைமையக பொலிஸாருக்கு அறிவிக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது.

# கட்டாரின் புகைப்பட போட்டியில் இடம்பிடித்தார் இலங்கை இளைஞர்




கட்டார் சபாரி மால் நடத்திய மாபெரும் புகைப்பட போட்டியான ‘பிரேம்ஸ் சீசன் 6’ இல் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற கத்தார் பிபா உலகக்கோப்பை கால்பந்து போட்டியின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எனும் தலைப்பின் கீழ் போட்டி நடத்தப்பட்டது.

இதில் இலங்கையில் கண்டி மாவட்டம்வடதெனியபிரதேசத்தை சேர்ந்த இளைஞர் ஹீபைப் முஸம்மிலின் புகைப்படம் தெரிவு செய்யப்படுள்ளது.

இவர் தன் சிறு வயதிலிருந்தே புகைப்படதுறையில் அதிக ஆர்வம் கொண்டவர். இவர் பல போட்டிகளிலும் பங்கு பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இவைகள் மாத்திரமின்றி ஒட்டு மொத்த இந்திய திரை உலக பிரபலங்களும் இணைந்த மிக பிரம்மாண்டமான நிகழ்வான தமிழ் மகன் விருதில் புகைப்பட கலைஞராக பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் ஸ்கை தமிழ் ஊடகத்தின் ஊடகவியலாளராகவும் புகைப்படபிடிப்பளாராகவும் மற்றும் அக்கினிச் சிறகுகள் சஞ்சிகையின் முன்னாள் துணை ஒருங்கிணைப்பாளராகவும் பணியாறியுள்ளார்.

தற்போது இவர் கட்டாரில் வடிமைப்பளாராக தொழில் புரிந்து கொண்டு அவருடைய திறமையை புகைப்படங்கள் மூலம் வெளிக்காட்டி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரபல புகைப்பட போட்டியில் சுமார் 500 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். அதில் பிரதானமாக சுமார் முப்பது புகைப்படங்கள் தெரிவுசெய்யப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட புகைப்படங்கள் கட்டார் அபுஹமூரில் உள்ள சபாரி மாலில் ஒகஸ்ட் 19 தொடக்கம் ஒகஸ்ட் 30 வரை மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியில் காட்சிபடுத்தப்பட்டுள்ள புகைப்படங்களுக்கு நடுவர்களால் தெரிவுசெய்யப்பட்டு பணப்பரிசு வழங்கப்படும்.(05)

# அரசின் நீண்டகால நிகழ்ச்சி நிரலிற்கு மறவன்புலோ சச்சி துணைபோகிறார்

## அம்பிகா சற்குணநாதன் சாட்டை



சிவசேனையின் மறவன்புலோ சச்சிதானந்தன் குருந்தூர் மலையை அடிப்படையாக வைத்து ஆளும்தரப்புமுன்னெடுக்கும் தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுகின்றார் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின்முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் சாடியுள்ளார்.

ருவிட்டர் பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

குருந்தூர் மலையில் இடம்பெறுவது தனியான ஒரு சம்பவமில்லை மாறாக வடக்கு, கிழக்கின் குடிசனப் பரம்பலை மாற்றுவது, நாடாளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை குறைப்பது உட்பட பல நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு நீண்டகாலதந்திரோபாயமே ஆளும்தரப்பின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்காக தொல்பொருள்திணைக்களத்தினர், இராணுவத்தினர், பௌத்தமதகுருமார்கள் பயன்படுத்துகின்றனர்எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்து வலதுசாரி அமைப்பானசிவசேனையின் மறவன்புலோசச்சிதானந்தன் போன்றவர்கள் ஆளும் தரப்பினரின் இந்த மூலோபாயத்தை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் முன்னெடுக்கின்றனர் எனவும் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த குழுக்களுக்கு ஆதரவளித்து கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களிற்கு எதிரான கருத்துக்களை வெளியிடும் தமிழர்கள் இதனை கருத்தில் கொள்ளவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தங்களை இந்த விடயம் பாதிக்காது எனக்கருதும் இந்த விடயம் குறித்து கரிசனையற்றவர்கள் பௌத்தமதகுருமார்நீதிமன்ற உத்தரவைமீறியுள்ளதையும் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததையும் கருத்தில் கொள்ளவேண்டும் எனவும் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

இதுநீதித்துறையின் அதிகாரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் செயல்படாத நீதி அமைப்பை மேலும் பலவீனப்படுத்தும் ஒரு செயலாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

## 10 லட்சம் ரூபாவுடன்

# காணாமல்போன வர்த்தகர் நண்பர் வீட்டிலிருந்து கைது

காணாமல்போனவர்என கூறப்பட்டகொலன்னவர்த்தகர் வெள்ளிக்கிழமை இரவு மிரிஹான பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிரிஹானை பகுதியில் உள்ள அவரது நண்பரின் வீட்டில் பதுங்கியிருந்தபோது குறித்த வர்த்தகர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை தெனியாய பகுதியில்உள்ளவங்கிஒன்றில் இருந்து 10 லட்சம் ரூபா பணத்தை பெற்றுக்கொண்டு வான் ஒன்றில் வீடு திரும்பிக்கொண்டிருந்த நிலையில் குறித்த வர்த்தகர் காணாமல்போயுள்ளார்.

இது தொடர்பாக வர்த்தகரின் மனைவி கொலன்ன பொலிஸில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், குறித்த வர்த்தகர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வானின்சாரதிஆசனத்தில் மிளகாய்த்தூள் வீசப்பட்ட நிலையில், வர்த்தகர் பயணித்த வான் கொலன்ன பனிங்கந்த பகுதியிலுள்ள பொது மயானத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் ஏற்கனவே மீட்கப்பட்டுள்ளது.

தேயிலை கொழுந்து சேகரிக்கும் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் குறித்த வர்த்தகர் கடந்த 16 ஆம் திகதி தெனியாய பகுதியில் உள்ள வங்கிக்கு சென்று பணத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்குவந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அணில்கந்த பிரதேசத்தில் வைத்து காணாமல்போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# கொழும்பிலிருந்து கண்டிக்கு விசேட ரயில் சேவைகள்


*கண்டிஎசலபெரஹராவை முன்னிட்டு பொதுமக்களின் பயண வசதி கருதி கொழும்பிலிருந்து கண்டிக்கு 4 விசேட ரயில் சேவைகளை முன்னெடுக்கவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்ப டுமென ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எம்.ஜே. இதிபொலகே தெரிவித்தார்.*

*அதற்கமைவாக கொழும்பு கோட்டையிலிருந்து கண்டி வரையிலும் மீண் டும் கண்டியில் இருந்து கோட்டை வரையிலும் இந்த விசேட ரயில்சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. எசல பெரஹராவில் கலந்து கொண்டு மீண்டும் வீடு திரும்பும் மக்களுக்காக கண்டியிலிருந்து மாத்தளை வரையிலும், கண்டியிலிருந்து நாவலப்பிட்டிய வரையிலும், கண்டியிலிருந்து கொழும்பு கோட்டை வரையிலும் இந்த விசேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எம். ஜே. இதிபொலகே குறிப்பிட்டார். (05)*

# ஜெரோம் பெர்னாண்டோவின் சர்ச்சைக்குரிய கருத்துக்கள்

## பெற்றோர் மன்னிப்பு கோரினர்



சர்ச்சைக்குரிய போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் பெற்றோர்தனதுமகனின் கருத்துக்களுக்காக மன்னிப்பு கோரியுள்ளனர்.

ஓமல்பே சோபித தேரரை அவரது அலுவலகத்தில் சந்தித்து ஜெரோம் பெர்னாண்டோவின் பெற்றோர் தமது மகனின் கருத்துக்களுக்காக மன்னிப்புக் கோரியுள்ளனர்.

ஏனைய மதங்கள் தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்துக்களை ஜெரோம் பெர்னாண்டோ தெரிவிப்பதைக் காண்பிக்கும் வீடியோக்கள்சமூகஊடகங்களில் வெளியானதைத் தொடர்ந்து அவர் சர்ச்சையில் சிக்கினார்.

இதனைத் தொடர்ந்து சிஐடியினர் அவர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மே14ஆம்திகதிஜெரோம் பெர்னாண்டோசிங்கப்பூருக்கு சென்றார் - இதேவேளை நீதிமன்றம் அவருக்கு எதிராக பயணத்தடை விதித்துள்ளது. (05)

# ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே நாட்டை முன்னோக்கி நகர்த்தமுடியும்

## விஜயகலா மகேஸ்வரன் தெரிவிப்பு




ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லமுடியும் என யாழ். மாவட்ட ஐக்கியதேசியகட்சியின் அமைப்பாளரும் முன்னாள் கல்வி இராஜாங்கஅமைச்சருமான விஜயகலாமகேஸ்வரன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை தொகுதிஐக்கியதேசியக் கட்சி அலுவலக திறப்பு விழாவில் கலந்துகொண்டு சிறப்பு உரையாற்றும் போது மேற்கண்டவாறுதெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மறுசீரமைப்புநாடுபூராகவும் முன்னெடுக்கப்படுகின்றது.

அதன் ஓர் அங்கமாக யாழ். மாவட்டத்திலும் கட்சியின் செயலாளரின் பங்குபற்றுதலுடன் வட்டுக்கோட்டை தொகுதியிலும் இடம்பெறுகின்றது.

தற்போது ஜனாதிபதி, நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதாவது, வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனால் மக்களின் வாக்கில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவில்லை.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் போட்டியிட்டிருந்தார்.

அந்த காலத்தில் வடக்கு மக்கள் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

அதன் காரணமாக தற்போதைய ஜனாதிபதியும் எமது கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஒரு லட்சத்து 50 ஆயிரம் வாக்குகளால் தோல்வியுற்று இருந்தார். அதற்கு முன்னர்1999ஆம்ஆண்டும் போட்டியிட்டிருந்தார்.

வருகின்ற ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிடவுள்ளார் போட்டியிட்டு உண்மையிலேயே அமோக வாக்குகளை பெற்று நாட்டை முன்னோக்கிகொண்டு போவதற்கு உங்களுடைய போதிய ஒத்துழைப்பை வேண்டி தான் இந்த கட்சி மறுசீரமைப்பு தற்பொழுது முன்னெடுக்கப்படுகின்றது.

அந்த ஒரு நோக்கத்தோடும் அதற்கும் அப்பால் இந்த நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டிய பொறுப்பு நமது கட்சித்தலைவரிடம் உள்ளது.

எனவே, வடக்கில் உள்ள மக்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எமது கட்சியின் தலைவருக்கு அமோக வாக்களித்து அவரை வெற்றியடைய வைப்பதன் மூலமே எமது நாட்டை முன்னேற்றிக் கொள்ள முடியும்.

தற்போதுள்ள நிலையில் எமது கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும்.

கடந்த 2014ஆம்ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் மக்கள் அமோக வாக்களித்து வெற்றி அடைய வைத்தோம்.

ஆனால் அவரது ஆட்சியின் இறுதிக்காலத்தில் அரசியல் சூழ்ச்சியை செய்து நாட்டில் அரசியல்குழப்பத்தை ஏற்படுத்திய போதிலும் அப்போதைய பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கதான் அந்த நிலைமையில் கூட நாட்டை சுமுகமான நிலைக்கு கொண்டு வந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியின்போது நாடு பொருளாதார ரீதியில் படுகுழிக்குள் தள்ளப்பட்டு இருந்தது பொதுமக்கள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்வதில் கடும் இன்னல் பட்டிருந்தபோது தனி மனிதனாக நின்று இந்த நாட்டைப் பொறுப்பெடுத்து இன்று வரிசை நிலைமையை மாற்றி மக்கள் தமது அன்றாட செயற்பாடுகளை சிக்கல் இன்றி முன்னெடுப்பதற்கான சகல செயற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளார்.

அதேபோல எங்களுடைய தலைவர் எதிர்காலத்தில் ஜனாதிபதியாக வந்தால் வடக்கு பகுதியில் அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்களை கட்டாயமாக நிறைவேற்றுவார்.

அதேபோலஇந்தநாட்டில் பொருளாதாரநெருக்கடிநிலை காரணமாக மூன்று நேர உணவைக் கூட உண்ண முடியாத நிலையில் மக்கள் வாழ்கின்றார்கள். கடந்த காலங்களில் நாங்கள் விட்ட பிழைகளை விடாது எமது கட்சி தலைவரை ஜனாதிபதி ஆக்குவதற்கு தமிழ் மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அத்தோடு எமது ஐக்கிய தேசிய கட்சியைப் பலப்படுத்துவதன் மூலம் வடக்கு மக்கள் மாத்திரமல்லாது இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழ முடியும். அதேபோல எதிர் வரும் 10 வருடங்களுக்குள்இந்தநாட்டைபழைய நிலைக்குகொண்டுவரக்கூடிய வழி வகைகள் ஏற்படும். எனவே, தமிழ் மக்கள் எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி ஆக்குவதற்கு அமோக வாக்களித்து தங்களுடையபூரணஒத்துழைப்பை வழங்கவேண்டும். -என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைப்பு செய்யும் வேலை திட்டம் நாடு பூராகவும்முன்னெடுக்கப்படும் நிலையில், ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் பாலித ரங்க பண்டாரவின் பங்குபற்றுதலோடுவட்டுக்கோட்டை தொகுதி ஐக்கிய தேசிய கட்சி மறுசீரமைப்பு அலுவலகத்தில் இடம்பெற்றது.

வட்டுக்கோட்டைஐக்கிய தேசிய கட்சி அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதோடு பாடசாலைமாணவர்களுக்கு உதவி பொருள்களும் வழங்கப்பட்டன. (05)

# பாலித ரங்கே பண்டார யாழ்ப்பாணம் வருகை







யாழ்ப்பாண மாவட்டத்துக்கு சனிக்கிழமைஜூலைவிஜயம்செய்துள்ளஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார நல்லூர் கந்தசுவாமிகோவில்மற்றும்ஆரியகுளம் நாகவிகாரை ஆகிய மதஸ்தலங்களுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார். இதனையடுத்து, யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தமது தேர்தல் தொகுதியில் ஐக்கியதேசியகட்சியின்உறுப்பினர்களை சந்தித்துசமகாலஅரசியல்தொடர்பாகவும் கலந்துரையாடினார். (05)

# ஓய்வுபெற்ற வைத்திய நிபுணர்களை மீண்டும் பணிக்கமர்த்தத் தீர்மானம்

*சுகாதாரத்துறையின் தேவைகளைக் கருத்தில் கொண்டு ஓய்வுபெற்ற விசேட வைத்திய நிபுணர்களை மீண்டும் பணிக்கு அமர்த்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.*

*சுகாதாரத்துறையில் கிட்டத்தட்ட ஐந்நூறு விசேட வைத்தியர்களின் வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனவும், அந்த வெற்றிடங்களுக்காக இவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர் எனவும் சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி.விஜசூரிய தெரிவித்தார்.*

*கொழும்பிற்கு வெளியே உள்ள தூரப் பிரதேசங்களில் விசேட வைத்தியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகம் காணப்படுகின்றன எனவும் ஓய்வுபெற்ற விசேட வைத்திய நிபுணர்கள் பணிக்கு திரும்ப விரும்பினால் அவர்களுக்கு சகல வசதிகளையும் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தயாராக இருப்பதாக சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (05)*

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வினை தீர்க்கட்டும் வேல்

இன்று நல்லூர் கந்தசுவாமி கோயிலில் கொடியேற்றம். வருடாந்தத் திருவிழாவின் தொடக்கம். இலங்கையிலேயே மிக நீண்ட நாட்கள் நடக்கக்கூடிய திருவிழாக்களில் மிக முக்கியமானது நல்லூர் கந்தசுவாமி கோயிலின் திருவிழா.

ஒரு ஆலயம், வழிபாட்டிடம் என்பதையும் தாண்டி இன்று தமிழர்களின் தனித்துவ அடையாளமாகவும் அழகாகவும் எழுச்சிபெற்று நிற்கின்றது நல்லூர். இந்தியாவில் உள்ள வழிபாட்டிடங்களை இன்று நல்லூருடன் ஒப்பிட்டே கருத்துச்சொல்லும் அளவிற்கு நிலமை முன்னேறி இருக்கின்றது.

நேர ஒழுங்குக்கும் நேர்த்திக்கும் நல்லூர் உலகப் புகழ் பெற்றிருக்கின்றது. அதன் முன்னாள் முதலாளியின் எளிமையும் பக்தியும்கூட உகலப் பிரசித்தம்.

அது மட்டுமல்ல அண்மையில் நல்லூருக்கு வந்திருந்த பாப்பரசரின் பிரதிநிதியையும் அவரோடு வந்திருந்த ஏனைய கிறிஸ்தவ மதகுருக்களையும் அவர்களின் ஆடைகளுடனேயே உள்ளே அனுமதித்து மத நல்லிணக்கத்தையும் புகட்டியுள்ளது.

நல்லூரிக்கு வருபவர் ஜனாதிபதியாக இருந்தாலும் ஆண்களாயின் மேலாடைகளைந்தே உள்ளே செல்ல முடியும் என்பது விதி. யாருக்காகவும் அந்த விதி தளர்த்தப்பட்டதில்லை. இருப்பினும் மதகுருக்கள் ஆடைகளுடன் உள்ளே நுழைய முடியும் என்கிற விதியைக் காரணம் காட்டி கிறிஸ்தவ மதகுருக்களை உள்ளே அனுமதித்து புதிய வரலாற்றையும் நல்லூர் படைத்தது.

தெற்கில் ஒரு தலதா மாளிகையைப் போன்று வடக்கில், தமிழர்களின் அடையாளமாகத் தலை நிமிர்ந்து நிற்கும் நல்லூர் ஒரு தனியார் சொத்து என்கிறபோதும், அதை உணர்த்தும் வகையில் ஆலயம் என்றும் நடந்துகொண்டதில்லை. அங்கு பக்திக்கும் பக்தர்களுக்குமே முக்கியத்துவம் தரப்படுகின்றது. அதனாலேயே அது இன்னமும் வாங்வாங்கு வாழ்ந்துகொண்டும் இருக்கின்றது.


ஆலயத்திற்கு வரும் எந்தவொரு பக்தனும்கூட தன்னால் அரச்சனை செய்ய முடியவில்லையே என்று கருதிவிடக்கூடாது என்பதற்காகவே இன்று வரை அர்ச்சனைக்கான பற்றுச்சிட்டையை ஒரு ரூபாய்கு மட்டுமே வழங்கக்கூடிய பெருந்தன்மையும் அருளும் நல்லூரைத் தவிர வேறு எந்த ஆலயத்திற்கு இருக்கின்றது. அந்தளவிற்கு கடவுளையும் பக்தர்களையும் மட்டுமே இலக்காகக் கொண்டு செயற்படும் தூய்மையே நல்லூரின் சிறப்பு.

அத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ்க் கடவுள் முருகனுக்கு இன்று மற்றொரு திருவிழா தொடங்குகின்றது. அது சிறப்புற்று தமிழர்களுக்கு அருள் பாலிக்கட்டும். தமிழர்களின் அரசியல் வேணவாக்களுக்கு தீர்வு கிடைக்கும் அருளையும் வழங்கட்டும். தமிழர் தம் வினைகளையும் தீர்க்கட்டும் அந்த வேல்.

# இரு ஆட்சி கவிழ்ப்புகளை எதிர்கொண்ட புட்டின்

## மாஸ்கோவில் சதிப்புரட்சியின் வரலாறும் சாத்தியங்களும்

ஐங்கரன் விக்கினேஸ்வரா





உக்ரேனிய போரின் திருப்பு முனையாக உள்ளக சதி மூலம் ரஷ்ய அதிபர் புட்டினை வீழ்த்த மேற்குலகும்- அமெரிக்காவும் தீவிரமாக முயன்றும், முயற்சியும் செய்து வருகின்றன. இதற்கு ஒத்து ஊதும் வண்ணம் மேற்கத்தய ஊடகங்கள் பல கற்பனைக்கதைகளைபரப்புவது சகஜம். கடந்த ஜூன் இறுதியில் 'வாக்னர்' ஆயுதக்குழுவின் தளபதி யெவ்ஜெனி பிரிகோஸின் மூலமாக மாஸ்கோவில் தலைமையைகைப்பற்ற முயன்ற சதிப் புரட்சி பிசுபிசுத்துப் போனதும் அறிந்ததே.

இதன்பின் இன்னோர் நெருக்கடி, புட்டினுக்கு எதிரான விமர்சனங்களை கடுமையாக அள்ளிவீசும் தீவிர தேசியவாதி 'இகோர் கிர்கினால்' மீண்டும் மாஸ்கோவில் உருவாகியது.

புட்டினின் அதிகாரம் பறிக்கப்பட வேண்டும் என்ற தொனியில், உக்ரேனிய போரில் வெற்றிபெற முடியாவிட்டால், புட்டின் தனது போர் அதிகாரங்களை 'பரிமாற்றம்' செய்ய வேண்டும் என்று மற்றொரு ரஷ்ய தீவிர தேசியவாதியான முன்னாள் ரஷ்ய தளபதி இகோர் கிர்கின் (Igor Girkin) மூலம் மாஸ்கோவில் பெரும் சலசலப்பு ஏற்பட்டது.

### யார் இந்த இகோர் கிர்கின் ?

முன்னர் ரஷ்யாவின் பெடரல் செக்யூரிட்டிசர்வீஸில் (FSB) அதிகாரியாக இருந்தவர், கிர்கின் ஸ்ட்ரெல்கோவ் என்றும் அழைக்கப்படுகிறார். மேலும் 2014 இல் கிரிமியாவை மாஸ்கோ இணைத்ததிலும், உக்ரைனின் டான்பாஸ் பிராந்தியத்தில் ஏற்பட்ட மோதலிலும் முக்கிய பங்கு வகித்தார்.

ரஷ்ய தேசபக்தர்களின் அமைப்பாளரான கிர்கின், வாக்னர் குழுத் தலைவர் பிரிகோஜினுக்கு நண்பர் அல்ல. ஆனால் கிர்கின் - முன்னாள் எவ்எஸ்பி (FSB) பாதுகாப்புப் பணியாளர் ஆவார்.

வாக்னர் குழு புட்டினுக்கு அச்சுறுத்தலாக இருக்கலாம் என்று முன்பு எச்சரித்திருந்தார். ப்ரிகோஜினைப் போலவே, அவர் சில சமயங்களில் புட்டினை கடுமையாக விமர்சிப்பதற்கும் தயங்கவில்லை.

முன்னாள் இராணுவ அதிகாரியான இகோர் கிர்கின் உக்ரைன் மீதான முழு அளவிலான படையெடுப்பில் ரஷ்ய படைகளுக்கு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தலைமை தாங்கியதற்கு மேலும் கடுமையான விமர்சனங்களை அளித்துள்ளார்.

### எம்.ஹெச். 17 விமான வழக்கில் இகோர் கிர்கின்

இகோர் கிர்கின் சமூக ஊடகங்களில் பெரிய அளவில் தொடர்பு உள்ளவர். ரஷ்ய ஜனாதிபதி மற்றும் அவரது தளபதிகளின் போர்க்கால நடத்தை குறித்த தனது அதிருப்திகளை அடிக்கடி கடுமையான விமர்சனங்களாக வெளிப்படுத்துபவர்.

கிழக்கு உக்ரைனில் 2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் விழுந்து நொறுங்கிய மலேசிய விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக நான்கு பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இகோர் கிர்கின், செர்கெய் டுபின்ஸ்கி மற்றும் ஒலெக் புல்டோவ் ஆகிய மூன்று ரஷ்யர்களும் லியோனிட் கார்சென்கோ என்னும் ஓர் உக்ரைன் நாட்டவரும் விமானத்தை ஏவுகணைகளை கொன்டு சுட்டு வீழ்த்தி, பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் 298 பேரைக் கொலை செய்தனர் என்று நெதர்லாந்து விசாரணையாளர் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பான நீதிமன்ற வழக்கு நெதர்லாந்தில் 2020 மார்ச்சில் நடந்தது.

### தோல்வியுற்ற வாக்னர் சதிப்புரட்சி

கடந்த ஜீன் மாத இறுதியில் வாக்னர் குழுவினரின் (Yevgeny Prigozhin - Wagner Group) யெவ்ஜெனி பிரிகோசின் தலைமையிலான ஆயுதமேந்திய கிளர்ச்சியில் சில நாட்கள் சூடுபிடித்த மாஸ்கோ விவகாரம், மற்றொரு ரஷ்ய அதி தீவிர தேசியவாதியால் மீளவும் மேற்குலக ஊடகங்களுக்கு பெருத்த தீனியை போட்டது எனலாம்.

மாஸ்கோ மீதான முற்றுகை நடக்கலாம் என ஐரோப்பிய ஊடகங்கள் பலவும் எதிர்பார்த்திருந்தபோதும், வாக்னர் குழுவினரின் கிளர்ச்சி இலகுவாக பிசுபிசுத்துப் போனது. இதன் பின் அதி தீவிர தேசியவாதிகள் (Ultra Nationalist) தலைநகரில் கூடி அதிபர் புட்டினால் உக்ரைனில் வெற்றி பெற முடியாவிட்டால், அவர் தனது அதிகாரங்களை சட்டப்பூர்வமாக மாற்ற வேண்டும் என்று வாதிட்டனர்.

மேற்குலக எண்ணத்தின்படி முன்பு எப்படி சோவியத் ஒன்றியம் உடைக்கப்பட்டதோ, அதே பாணியில் இப்போது ரஷ்யாவை சிதைக்கும் திட்டத்தில் மேற்குலக ஊடகங்கள் முனைப்பாக உள்ளன.

### ரஷ்யாவில் ஆட்சி கவிழ்ப்பு வரலாறு

சோவியத் சிதைவின் பின்னர் இரண்டு முறை ஆட்சி கவிழ்ப்பை சந்தித்தது ரஷ்யா. 1991ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சோவியத் ரஷ்யா உடைவதற்கு முன், கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் ரஷ்யா உருவாவதற்கு முக்கிய பங்கு வகித்த 15 குடியரசுகளுக்கு சுயாட்சி அதிகாரம் வழுங்கும் அதிகார ஒப்பந்தத்தை தடுத்து அதிகாரத்தை கைப்பற்ற நினைத்த சதி முறியடிக்கப்பட்டது.

அதன்பின் இரண்டு வருடங்கள் கழித்து 1993ஆம் ஆண்டு செப்டம்பர் 21 முதல் ஒக்ரோபர் 4 வரை நாடாளுமன்ற கிளர்ச்சி ஒன்றும் ஏற்பட்டது.



ரஷ்ய விரோதப் போக்கு மேற்கத்திய ஊடக மனோபாவங்களில் ஊறி அது பரவி முழுமையாய் ஊறிப் போயுள்ளது. அதற்கு நேர் மாறாக அமெரிக்கா ஏதோ உலகிற்குவிடுதலைவாங்கித்தரவந்தமீட்பர்கள் போலவும் பல மேற்குலக ஊடகங்களும் தொடர்ந்து பல ஆண்டுகளாகப் பரப்புரை செய்து வருவதையும் பார்க்கிறோம்.

### வாக்னர் ஆயுதக் குழு பின்புலம்

உக்ரைன், நோட்டா அமைப்புடன் இணைவது ரஷ்யாவுக்கு அச்சுறுத்தல் என ரஷ்யா எச்சரித்தும், உக்ரைன் நோட்டாவுடன் இணைவதில் உறுதியாக இருந்தது. இதனால், ரஷ்யா உக்ரைனுக்கு எதிரான போரைத் தொடங்கியது.

இப்போரில் வாக்னர் ஆயுதக் குழு உக்ரைனின் கிழக்குப் பகுதியில் ராணுவத் தாக்குதலின்போது பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. குறிப்பாக, கிழக்கு உக்ரைனின் பக்முத் பகுதி கைப்பற்றப்பட்டதில் வாக்னர் ஆயுதக் குழுவின் செயல்பாடுகளுக்கு அதிபர் புட்டினே பாராட்டுகளைத் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உக்ரைன்-ரஷ்யப் போரில் ரஷ்யாவுக்காக வாக்னர் குழு சுமார் 30,000 பேரை பலி கொடுத்திருப் பதாகக் கூறப்படுகிறது. உக்ரைனின் பெரும்பகுதிகளை வாக்னர் குழுதான் கைப்பற்றி ரஷ்யாவிடம் ஒப்படைத்ததாகவும் தகவல்கள் முன்பு வெளியாகின.

ரஷ்யா மட்டுமல்லாது லிபியா, மாலி, சிரியா எனப் பல பகுதிகளிலும் உள்நாட்டுப் போரில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆளும் தரப்புகளுக்கு ஆதரவாக இந்தக் குழுவினர் இயங்குகின்றனர். ஒரு மூர்க்கத்தனமான ஆயுதக் குழு என்றும், பக்முத்தில் வாக்னர் குழுவை இறக்கி தங்கள் படைகளுக்கு பெரும் சேதத்தை ரஷ்யா ஏற்படுத்தியது என்றும் உக்ரைன் குற்றஞ்சாட்டி இருந்தது.

இவ்வாறாக இவர்களின் படைகள் உக்ரைன் மீதான தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்பட்டது. இப்போது நடக்கும் போர் தொடங்குவதற்கு முன்னரே 2014 தொட்டு உக்ரைனில் அவ்வப்போது சிறு தாக்குதல்களை இவர்கள் நடத்தினர். குறிப்பாக, கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்கும் போரில் 'தி வாக்னர்' ஆயுதக் குழு பெரும் பங்காற்றியது.

2015இல் தொடங்கி இந்த ஆயுதக் குழு சிரியா, லிபியா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் உள்நாட்டுக் கிளர்ச்சிகளில் அரசுக்கு ஆதரவாகப் பணியாற்றியுள்ளது. அதேபோல் சிரியாவின் தங்கச் சுரங்கங்களைப் பாதுகாக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது என்பது அறிந்ததே.

அதிபர் புட்டினின் ஆதரவோடு வளர்க்கப்பட்ட வாக்னர் குழுவானது, அவருக்கு எதிராகவே திரும்பியது எனக் கூறப்பட்டாலும் மாஸ்கோவில் ஆட்சி மாற்றமோ அல்லது புட்டினை வீழ்த்துவது அரிதே என ஊகிக்கப்பட்டது.

தற்போதய சிக்கலின் பின்னணி என்னவென்று பார்த்தால் ,உக்ரேனிய வலிந்த எதிர் தாக்குதல்கள் முறியடிப்பின் பின்னரே ஊடகங்களின் போராக வாக்னர் குழு பற்றிய தகவல்கள் வந்துள்ளன. அதேவேளை மேற்குலக படைபல ஆதரவுடன் உக்ரேனிய வலிந்த எதிர் தாக்குதல்கள் ரஷ்யாவால் முறியடிக்கப்பட்டுள்ளதை மேற்குலக ஊடகங்கள் உறுதிப்படுத்தி உள்ளன.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சக வீடியோவை முழுமையாக ஆதாரப்படுத்தி ஏற்காவிட்டாலும், உக்ரேனின் 186 டாங்கிகள், 418 கவச வாகனங்கள் இழந்ததை கீவ் தலைநகரம் மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளது.

### 33 நாடுகளில் உக்ரைனிய வீரர்களுக்கு பயிற்சி

கடந்த வருடம் பெப்ரவரி 24, 2022 அன்று, ரஷ்யா உக்ரைனில் ஒரு சிறப்பு இராணுவ நடவடிக்கையின் பின், டொனெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மக்கள் குடியரசுகள் உக்ரேனிய படைகளின் கோரமான தாக்குதல்களின் கீழ் வாழ்ந்து வந்த டான்பாஸ் பிராந்தியத்தை விடுவிக்கும் நோக்கில் ரஷ்யாவின் சிறப்பு நடவடிக்கை ஆரம்பமாகியது.

ரஷ்யா எல்லையில் உக்ரைன் கடந்த ஜூனில் உக்ரைன் வலிந்த எதிர் தாக்குதலை (Counter offensive) நடத்தியது. அதில் ரஷ்யா கைப்பற்றிய சில கிராமங்களை மீட்டுள்ளதாக முதலில் தகவல் வெளியிட்டனர். ஆயினும் ரஷ்யாவின் எதிர் தாக்குதலால் இப்போரில் உக்ரைனுக்கு இழப்பு அதிகம் என கூறப்பட்டுள்ளது. ஆக மொத்தமாக போரின் திருப்பு முனையாக உள்ளக சதி மூலம் அதிபர் புட்டினை வீழ்த்த மேற்குலகும்- அமெரிக்காவும் முயல்கின்றன. இதற்கு ஒத்து ஊதும் வண்ணம் மேற்கத்தய ஊடகங்கள் பல கற்பனைக் கதைகளை பரப்புவது சகஜம்.

ஆயினும் மாஸ்கோவில் சதிப்புரட்சி சாத்தியமற்றதாகவும், ரஷ்ய அதிபர் புட்டினுக்கு ஏற்பட்ட நெருக்கடிகள் தற்காலிகமானவையுமாகவே தென்படுவதாக மாஸ்கோவில் ரஷ்ய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# 50 வைத்தியர்களும் 20 தாதியர்களும் வடக்கு மாகாணத்தில் வெளியேற்றம்

## சுகாதார பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் ஒருவருடத்தில் 50 வைத்தியர்களும் 20 தாதியர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என வட மாகாணசுகாதாரபணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வவுனியா வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

வட மாகாணத்தில் ஒரு வருட காலப்பகுதியில் 50 இற்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இவர்களில் வெளிநாட்டுக் கல்விக்காக சென்று வராதவர்களும் உள்ளனர். அத்துடன் 20 தாதியர்களும் வெளியேறியிருக்கின்றனர்.

வைத்தியர்களும் தாதியர்களும் வெளியேறுவது எமக்க ஒரு சவாலான விடயம். அத்துடன் அண்மைக்காலத்தில் கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இங்கு ஆரம்பிக்கப்பட வேண் டிய தாதிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த வருடம் தாதிய கல்லூரியில் படித்து வெளி யேறுபவர்கள் இருந்தாலும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு தாதிய பயிற்சிகள் இடம்பெறாத நிலை காணப்படும். ஆகவே, இந்த பகுதிக்கு புதிய தாதிகள் வரமாட்டார்கள். இதனால் நாம் சிக்கலான சவாலை எதிர்கொள்வோம். அத்துடன், வெளிநாடுகளில் தாதியர்களை வரவேற்பதால் அவர்கள் வேலையை முடிவுறுத்தி வெளியேறலாம். எனவே, எதிர்வரும் காலம் சவாலை எதிர்கொள்ளும் காலமாக அமையும்.

அத்துடன், இலங்கை பூராகவும் மருந்து தட்டப்பாடு ஏற்பட்டு வருகின்றது. இருந்தபோதிலும் 90 வீதத்துக்கும் அதிகமான மருந்துகள் அந்தந்த வைத்திய சாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

வவுனியா வைத்தியசாலையில் இரத்த சுத்திகரிப்பு ஒரு நாளைக்கு 40 பேருக்குசெய்யப்படுகின்றது. இதனைச் செய்வதற்கான திரவத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டாலும் தற்போது அது தேவையான அளவு உள்ளது. பொருளாதார நெருக் கடிக்கு பின்னர் மருந்து தட்டுப்பாடு வட மாகாணத்தில் அனைத்து வைத்தியசாலையிலும் ஏற்பட்டிருந்தது. இதனால் பொது மக்கள் அசௌகரியத்தைசந்தித்திருந்தனர்.



தற்போது நிலைமை ஓரளவு சுமுகமாகி வருகின்றது. இருந்தபோதிலும் ஒரு சில கிளினிக் மருந்துகள் மற்றும் விசேட வைத்தியத்துக்காக வழங்கப்படும் மருந்தை பெற்று வழங்குவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. இதற்கு வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் நிர்வாகத்தினர் நன்கொடையாளர்களிடம் மருந்துகளை பெற்று சிகிச்சையை வழங்கி வருகின்றளர் எனவும் தெரிவித்தார். (05)

## குழந்தை இருதய வைத்திய நிபுணர் 6 பேர் நாட்டைவிட்டு வெளியேற்றம்

நாட்டிலிருந்து வைத்தியர்கள்வெளியேறுவதுபோதிய வைத்தியர்கள் இன்மை போன்றவற்றிற்கு மத்தியில் குழந்தைகளுக்கான இருதய நோய் நிபுணர்கள் 6 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்ற கவலை அளிக்கும் செய்தி வெளியாகியுள்ளது.

இதன் காரணமாக, நாட்டில்குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை சேவைகள் கேள்விக்குறியாகியுள்ளன.

நாட்டில் மருத்துவ துறையில் முழுத் தகுதி பெற்ற குழந்தைகளுக்கான இருதயநோய்நிபுணர்களின் நிலையான எண்ணிக்கை 20 ஆக இருக்க வேண்டும். இருப்பினும், தற்போதைய எண்ணிக்கைபதினொன்றாக மட்டுமே இருந்தது. அவர்களில்ஆறு பேர்நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்கள்.

தற்போது, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும்குருநாகல்போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் முழுத் தகுதியுள்ள ஐந்து குழந்தைகளுக்கான இருதயநோய் வைத்திய நிபுணர்கள் மட்டுமே உள்ளனர். குறித்த வைத்திய நிபுணங்களின் பற்றாக்குறை மேலதிக சிகிச்சைக்காக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளதாக மூத்த குழந்தை இருதயநோய் நிபுணர் ஒருவர் ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களுக்கான சிகிச்சைக்கு லேடி ரிட்ஜ்வே சிறுவர்வைத்தியசாலையை பரிந்துரைக்கப்படுவது வழமையான விடயம் என்றாலும், தற்போது சிறுவர்கள் அனுமதிக்கபடுவதுஅதிகரித்து காணப்படுதற்குநிபுணர்களின் பற்றாக்குறைக்குகாரணமாக இருக்கலாம் சுகாதாரநிபுணர் மேலும் தெரிவித்துள்ளார்.

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை உள்ள நான்கு குழந்தை இருதயநோய் வைத்திய நிபுணர்களில், இருவர் நாட்டை விட்டுவெளியேறியுள்ளார்கள்.

இதன் காரணமாக இருதய சிகிச்சை சேவைகளை நிர்வகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

தற்போது, இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டு வருகிறது. இருப்பினும், சுகாதார அதிகாரிகளின் கூற்றுப்படி, இந்த விடயத்தை முழுமையாக ஒழுங்குப்படுத்த இன்னும் மூன்று ஆண்டுகள் ஆகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## மட்டக்களப்பில் மோசடி செய்த போலி வெளிநாட்டு முகவர் கைது

மட்டக்களப்பில் சட்ட விரோத வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவராக செயற்பட்டு வந்த நபரொருவரைக் கைது செய்துள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் கடந்த வருடம் நவம்பர் மாதம் சவுதி அரேபியாவுக்கு வேலைக்கு அனுப்புவதாக கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் ஒரு லட்சம் ரூபாவும் இன்னொருவரிடம் 60 ஆயிரம் ரூபா உட்பட ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவை வாங்கி கொண்டு கடந்த 7 மாதங்களாக வெளிநாட்டுக்கு அனுப்புவதாக ஏமாற்றி வந்துள்ள நிலையில் அவருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். இதனையடுத்து, குறித்தபோலிமுகவரைபொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து பொலிஸார் விசாரணையின் பின்னர் மோசடியில் ஈடுபட்ட அவரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை சனிக்கிழமை மட்டு நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோயாளர்களுக்கு சத்து மா வழங்கல்







*புற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளருக்கு இலவச சத்து மா அன்பளிப்பு வைத்திய அத்தியட்சகர் றெமான்ஸ் தலைமையில் புற்றுநோய் வைத்திய விடுதியில் சிறப்பாக நடைபெற்றள்ளது.*

*இதற்கான அனுசரணையை ஆதார வைத்திய சாலையில் கடமை ஆற்றியவரும் இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு எனும் முகவரியைக் கொண்டவரும் தற்போது கனடாவில் வசிப்பவருமாகிய எஸ்.ரவீந்திரன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)*

## இணைந்த கரங்கள் அமைப்பினால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்









கமு/சது/வீரச்சோலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 85 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப் பை, பாதணி என்பன வழங்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் அந்தோனி சுதர்சன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமைபாடசாலையில்காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

இணைந்த கரங்கள் அமைப்பு உறவுகளின் நிதி பங்களிப்போடும் மற்றும் மில்ரோகித் ராஜ்குமாரின் நிதி பங்களிப்புடன் இணைந்து இந்த மாணவகளுக்கான கற்றல் உபகரணங்கள்,பாதணிமற்றும்புத்தகப்பைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபர் இ.தியாநிதி, திருமதி ராஜ்குமார் ஜெயச்சித்திரா ஆகியோர் அதிதிகளாகவும்மேலும்பாடசாலையின் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களைவழங்கிவைத்தனர்.

மேலும் இணைந்த கரங்கள் அமைப்பின் உறுப்பினர்களானகாந்தன், சுரேஷ், ஆகியோரால் பாடசாலை மாணவர்களுக்குகற்றல்உபகரணங்கள், புத்தகப்பை,பாதணிகள் என்பனவழங்கி வைக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (05)



## நல்லூரான் கொடிகாண எல்லோரும் வந்திடுவார்!

நல்லூரான் கொடிகாண எல்லோரும் வந்திடுவார்
நாடுவிட்டு சென்றோரும் ஓடியோடி வந்திடுவார்
வல்வினைகள் போக்கென்று மனமுருகி வேண்டிடுவார்
மால்மருகன் கொடிகண்டு மனநிறைவும் கொண்டிடுவார்

கொடியேற்றம் வருநாளை மனமெண்ணி மகிழ்ந்திடுவார்
அடியழித்து அடியழித்து பெண்களங்கு பணிந்திடுவார்
விண்ணவரும் வியந்துமே மலர்மாரி சொரிந்திடுவார்
மண்ணகத்தில் நல்லூரும் மங்கலமாய் ஒளிர்ந்திடுமே

ஏழைபணக் காரென்னும் பேதமின்றி எல்லோரும்
தாழ்மையுடன் கொடிகாண தமைமறந்து இணைந்திடுவார்
வேலவனின் திருமுகத்தை அகமதனில் பதித்திடவே
காதலுடன் காத்திருப்பார் கந்தனவன் சன்னிதியில்

கந்தனது சன்னதியில் பெதமெலாம் அகன்றுவிடும்
நொந்திடுவார் அழுதிடுவார் நோயுள்ளார் வேண்டிடுவார்
வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தாநீ நீக்குவென கைகூப்பி ஏங்கிடுவார்

அமர்க்களங்கள் அடங்கிவிடும் அதிகாரம் பதுங்கிவிடும்
ஆணவமும் அடங்கிவிடும் அப்பனது சன்னதியில்
அன்படியார் அனைவருமே அப்பனது நாமமதை
அகத்திருத்தி உருக்கமுடன் பாடிப்பரவச மாகிடுவார்

வேதியர்கள் வேதவொலி விண்ணவரும் கேட்டுவிட்டு
பூதலத்தில் நல்லூரை புகழ்ந்துமே வாழ்த்திடுவார்
ஓதிடுவார் திருமுறையை உளமுருக வைத்திடுவார்
நாதஸ்வர மோடுமேளம் நமையலயிக்கச் செய்திடுமே

கொடியேறும் நிலைகாண அடியார்கள் காத்திருப்பார்
வடிவழகன் நல்லூரான் கொடிபிடிப்பார் வேதியர்கள்
பூமாரி சொரிந்திடவே வேதமந்திர மொலித்திடவே
நல்லூரான் கொடியேற்றம் நல்வேளை நடந்திடுமே

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் ஆஸ்திரேலியா .

காலைக்கதிர்
Kalaikkathir



காலைக்கதிர் Kalaikkathir





# டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக தெல்லிப்பழை வைத்திய சாலையில் சிரமதானம்

தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில் வைத்திய அத்தியட்சகர் எம்.றெமான்ஸ் தலைமையில் வைத்திய சாலை நிர்வாக உத்தியோகத்தர், சிரேஷ்ட தாதிய பரிபாலகி மற்றும் பொது சுகாதார நோய்க்கட்டுப் பாடு தொடர்பான அதிகாரிகள் மற்றும் வைத்திய சாலையின் தொற்று நோய் கட்டுப்பாட்டு பிரிவின் வைத்திய சாலை மேற்ப்பார்வையாளர் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் வைத்திய சாலையின் தாதியர்கள் மற்றும் அலுவலகஉத்தியோகத்தர்கள்மற்றும்வைத்திய சாலையின் பரிசாரகர்கள், சுகாதாரப் பணி உதவியாளர். மற்றும் வைத்திய சாலையின் துப்புரவுத் தொழிளாளர்கள் ஆகியோரின் பங்கு பற்றுதலுடனும் இலங்கை இராணுவத்தின் யாழ்.மாவட்ட 513 ஆவது காலாட்படை படைப்பிரிவின்பாதுகாப்புபடையினரும் இனைந்து கடந்த வியாழக்கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலையில்டெங்குகட்டுப்பாடுவாரத்தை ஆரம்பிக்கும் முகமாக வைத்திய சாலையின்வளாகத்தில்பாரியசிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (05)

# புற்றுநோயாளர்களுக்கான சி.ரி. சிமிலேற்றர் மீளவும் தெல்லிப்பழையில் இயங்குகின்றது

## வைத்திய அத்தியட்சகரின் தீவிர முயற்சியால்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புற்று நோயாளர்களுக்கான அந்த நோயின் பரவல், வீரியம், தாக்கத்தின் அளவு என்பவற்றைக் கண்டறியும் இயந்திரமான சி.ரி. சிமிலேற்றர் இயந்திரம் பழுதடைந்தமையால் வைத்தியசாலைக்கு வரும் புதிய புற்றுநோய் தாக்கத்துக்கு உட்பட்டவர்களுக்கு ஸ்கான் செய்து அவர்களுக்குரிய கதிர்வீச்சு சிகிச்சையை முறையாக கால நிர்ணயம் செய்து வழங்கமுடியாத அவல நிலைமை காணப்பட்டது.

இதனால்வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அப்பால் தென்னிலங்கையில்இருந்தும்கூட நோயாளர்கள் வைத்தியசாலைக்கு சிரமத்தின் மத்தியில் வருகைதந்து ஏமாற்றத்துடன்திரும்பிச்செல்லும்அவலநிலைமைகாணப்பட்டது.

இந்தவிடயம்தொடர்பில் ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து நோயாளர்கள், வடக்கு மாகாண அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரிடம் கருத்துக்களைக்கேட்டுசெய்தி பிரசுரித்திருந்தன.

இந்த விடயம் ஊடகங்களில்வரும்போதேஅதற்கான கொள்வனவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்திய அத்தியட்சகர் எம்.றெமான்ஸ் தெரிவித்திருந்தார். ஆயினும், இந்த விடயம் பூதாகரமானதைத் தொடர்ந்து வைத்திய அத்தியட்;சகர் தீவிர முயற்சி மேற் கொண்டதன் பயனாக 15 லட்சம் ரூபா செலவில் அதற்கானதிருத்தவேலைகள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றுபூர்த்தியடைந்துள்ளன.

இது தொடர்பாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளர் லயன் சி.ஹரிகரன் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த விடயத்தில் உடன் துரித நடவடிக்கை மேற்கொண்ட வைத்திய அத்தியட்சகர்எம்.றெமான்ஸ்மற்றும் வைத்தியசாலைச் சமூகம், மாகாண, மத்திய சுகாதாரத் திணைக்களத்தினருக்கு முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், இந்த விடயத்தை வெளியே கொண்டுவந்த ஊடகங்கள், மாகாண அரச வைத்திய அதிகாரிகள் சங்க பிரதிநிதிகள், மாகாணசுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். வழமைபோன்று எவ்வித தடங்கலும் இல்லாமல் புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சை வழங்கப்படும். - என்றார். (05)

# கல்முனை ஈராக் நட்புறவு ஒன்றிய நிர்வாகிகளை சந்தித்தார் ஹரீஸ்

கல்முனை ஈராக் நட்புறவு ஒன்றியம் மற்றும் மஸ்ஜிதுல் பத்ரீய்யா நிர்வாகிகளுக்கும்,முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்காமுஸ்லிம்காங்கிரஸ் பிரதித் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ்"டனான சிநேக பூர்வமான சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமைநாடாளுமன்ற உறுப்பினரின் சாய்ந்தமருது காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கல்முனை பிராந்தியங்களில் உள்ள அனாச்சார செயல்களை கட்டுப்படுத்தல், இளைஞர்கள் மத்தியில் தலைதூக்கியுள்ள போதைப்பொருளை இல்லாதொழிக்க முன்னெடுக்கவேண்டிய வேலைத்திட்டங்கள் மற்றும் பாடசாலைகளின் அபிவிருத்திநடவடிக்கைகள் மாணவர்களின் கல்வி மேம்பாட்டு,விளையாட்டு நடவடிக்கைகள் போன்ற பலதரப்பட்ட விடயங்களை ஆராய்ந்தனர்.

மேலும், கல்முனை மக்கள் எதிர்நோக்கும் சமூக, சமய, கலாசார மற்றும் பொருளாதார பிரச்சினைகள் பற்றியும் எதிர்கால நலத்திட்டங்கள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மேலும் சமூக மைய நிலையங்கள், கல்வி மைய நிலையங்கள் அமைக்கப்பட்டு அதனூடாக பலதரப்பட்ட சமூகம் சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

கல்முனையில் வாழும் வீடற்ற மக்களுக்கான வாழ்விடவசதிகளைஏற்படுத்தி மீள் குடியேற்றங்களை அமைத்து அதனூடாக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்கின்றவிடயமும்விரிவாக ஆராயப்பட்டது.

அத்தோடு கல்முனை நகர எல்லை விடயமாகவும், கல்முனையின் இருப்பு சம்பந்தமாகவும் விரிவாக கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஈராக் நற்புறவு ஒன்றியம் மற்றும் பத்ரீய்யா பள்ளிவாசல் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். (05)



# வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தின் தமிழர்களை பிரபாகரன் ஒன்றிணைத்தார்

## சாள்ஸ் நிர்மலநான் சுட்டிக்காட்டு

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களிடையிலும், தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடையிலும் இருக்கின்ற ஒற்றுமையின்மை காரணமாகவே இந்த நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் தமிழர்களை இலகுவாக தமது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு வழிநடத்துகின்றனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன்தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் அந்த அமைப்பின்தலைவர் வே.பிரபாகரன் வடக்கு, கிழக்கு, மலையகம் என்ற ஒன்றிணைந்த ஒரு கட்டமைப்பை உருவாக்கி, நாம் ஒரே தமிழர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று அடையாளப்படுத்தினார் எனவும் சாள்ஸ் நிர்மலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற 'மலையகத் தமிழ் மக்களுடைய 200 வருட வரலாறு' எனும் வரலாற்று நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

மலையக மக்களுடைய 200 வருட வாழ்க்கை வரலாற்றை ஏன் எழுதவேண்டும்என்பதைப்பற்றிநாம் சற்றுச் சிந்திக்கவேண்டும்.

ஒரு புத்தகம் எழுதுவதாகவிருந்தால்அதற்குஒருகாரணம்வேண்டும்.

இந்தப்புத்தகத்தை இரா.சுப்பிரமணியம் பல வேலைப் பழுக்களுக்கு மத்தியில் ஏன் எழுதினார் என்பதைச் சிந்திக்கவேண்டும்.

ஏன் எனில், கடந்த 200 வருடங்களாக மலயக மக்கள் பட்ட துன்ப துயரங்களை ஒரு பதிவாக, இன்னும் பல்லாயிரம் வருடங்களுக்குப் பிற்பாடு தாம் பட்ட துன்ப துயரங்களை தமது சமுதாயம்திரும்பிப் பார்க்கவேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக இந்தப் புத்தகம்வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

இதனை வெறுமனே புத்தக வெளியிட்டு விழாவாக மாத்திரம் கருதமுடியாது.

புத்தகங்களை இங்கிருந்து வாங்கிச் சென்று, சில நாள்களுக்குப் பிற்பாடு அந்தப் புத்தகம் எங்கே என்று தெரியாத ஒரு சமூகக் கலாசார சூழலில்தான் நாம் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

புத்தகங்கள் படிக்கின்ற ஆற்றல் குறைந்து சமூகவலைத் தளங்களில் எமது பார்வைகள் அதிகமாகியிருக்கின்றன.

ஆனால்புத்தகங்களில்இருக்கின்ற அந்த வரலாறுகளை நாங்கள் நிச்சயமாகப் படிக்கவேண்டும்.

எங்களுடைய வரலாறுகள் என்னவென்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

எங்களுடைய முன்னோர்கள் எங்களுக்காகப் பட்ட துன்பங்களை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அவ்வாறு அறிந்துகொண்டால்தான் நாம் சரியாக வாழமுடியும்.

எங்களுக்காக எங்களுடைய முன்னோர்கள்பட்ட துயரங்களை அறிந்தால் நாம் சரியான சிந்தனையுடன், நாம் நல்ல வழிகளில் வாழ்வதற்கு எங்கள் முன்னோர்கள் செய்த தியாகங்கள், துன்பங்கள் எமக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும். அந்தவகையில் இந்தஇரா.சுப்பிரமணியம்அவர்களை நான் வாழ்த்திநிற்கின்றேன். ஒருவரலாற்றை பதிவிட்டு அனைத்து மக்களுக்கும் சென்று சேரக்கூடியவகையில் இந்தப் புத்தகத்தை அவர் அமைத்திருக் கின்றார்.

கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்பு நாம் இந்த மண்ணில் சுதந்திரமாக எமது கலாசார அடிப்படையில், மதஅடிப்படையில், இன அடிப்படையில்,மொழிஅடிப்படையில் ஒரு கௌரவமான வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருந்தோம்.

ஆனால் தற்போது பெரும்பாண்மை இனத்தவர்கள் எங்களை வழிநடத்துகின்ற, எம்மை துச்சமாக நினைக்கின்ற அளவிற்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களிடையிலும், தமிழ் மக்கள் பிரதிநிதிகளிடையிலும் இருக்கின்ற ஒற்றுமையின்மை காரணமாகவே இந்த நாட்டிலுள்ள ஆட்சியாளர்கள் எம்மை இலகுவாகத் தமது நிகழ்ச்சி நிரலுக்குஏற்வாறுவழிநடத்துகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வடக்கு, கிழக்கு, மலையைகம் என்ற ஒன்றிணைந்த ஒரு கட்டமைப்பை உருவாகியிருந்தார். அத்தோடுமலையகத்தில்பொங்குதமிழ் நிகழ்வொன்று அப்போது மேற்கொள்ளப்பட்டது.

வடக்கு, கிழக்கு மற்றும், மலையகத்தில் பொங்கு தமிழ் மேற்கொள்வதனூடாக நாம் மூன்று பகுதிகளிலும் ஒரே தமிழர்களாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்று அன்று பிரபாகரன் அடையாளப்படுத்தினார்.

ஆனால் தற்போது வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய மூன்றுபகுதிகளையும் உள்ளடக்கிய கட்டமைப்பு இல்லாமல் , வடக்கிற்கு வேறாக, கிழக்கிற்கு வேறாக, மலையகத்துக்கு வேறாக தமிழ் மக் கள் பிரிந்து நிற்கின்றனர். இது எமது முன்னோர்களுக்கு நாம் செய்கின்ற துரோகமாகவே பார்க்கிறேன். முடிந்தவரையில் நாம் அனைவரும் ஒற்றுமையாகப் பயணிப்போம் - என்றார். (05)

# மாளிகைக்காடு ஹுசைன் வித்தியாலய 'முத்தாய்ப்பான முத்து' தொடக்கவிழா



கல்முனை கல்வி வலய மாளிகைக்காடு கமு/கமு/ அல்-ஹுசைன் வித்தியாலய 30ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டும், பாடசாலையின் முதல் ஆசிரியரும், இரண்டாவது அதிபருமான அல்ஹாஜ் ஏ.எல்.எம். ஏ. நழீரின் ஓய்வை முன்னிட்டும் பாடசாலை பழைய மாணவர்கள் செயற்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள 'முத்தாய்ப்பான முத்து' விழாவின் முதல் கட்ட டீ சேர்ட் அறிமுக விழா ஞாயிற்றுக்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.

பாடசாலை பழைய மாணவர்கள் செயற்குழு செயலாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினருமான நூருல் ஹுதா உமர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலய அபிவிருத்தி பிரிவுக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பீ. ஜிஹானா ஆலிப், கல்முனை கோட்டக்கல்வி பணிப்பாளரும், கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி ஏ.பி.எப். நஸ்மியா சனூஸ், இலங்கை உள்ளூராட்சி மன்றங்கள் சம்மேளன நிகழ்ச்சி திட்ட ஆலோசகர் எம்.ஐ.எம்.வலீத், சாய்ந்தமருது அனைத்து பொது நிறுவனங்கள் அமைப்பின் தலைவரும்,அமானாநற்பணி மன்றதலைவருமான ஏ.எல். பரீட், பாடசாலையின் பிரதியதிபர் ஏ.எல்.எம். நளீம், ஆசிரியர்கள், அல்-ஹுசைன் வித்தியாலய பழைய மாணவர்கள், செயற்குழு உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள 'முத்தாய்ப்பான முத்து' விழா தொடர்பிலும், பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள், புதிய அதிபர் விடயங்கள் தொடர்பிலும் இங்கு கருத்துக்கள் வெளியிடப்பட்டு கலந்துரையாடப்பட்டது.(05)

# மலையக தமிழர் வாழ்வு வலி நிறைந்ததே உரிய தீர்வுகள் வழங்கப்படல் வேண்டும்

## ரவிகரன் வலியுறுத்து



மலையகத் தமிழர்களின் வாழ்வும், வடக்கு கிழக் குத் தமிழ் மக்களின் வாழ்க்கையைப்போன்று வலிநிறைந்தவாழ்க்கைஎன முன்னாள்வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே மலையகத் தமிழர்களுக்கும், வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களுக்கும் உரிய தீர்வுகள் வழங்கப்படவேண்டுமெனவும் ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். முல்லைத்தீவு - புதுக் குடியிருப்பில் இடம்பெற்ற 'மலையகத் தமிழ் மக்களுடைய 200 வருட வரலாறு' எனும் வரலாற்று நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

மலையகத் தமிழ் மக்கள் இந்தியாவிலிருந்து மார்க்கமாக அழைத்துவரப்பட்டுதலைமன்னாரில் தரையிறக்கப்பட்டதாகவும், மலையகப்பகுதிகளுக்குகால் நடையாக அழைத்துச்செல்லப்பட்டனர் எனவும் நாம் வரலாறுகளிலிருந்து அறிகின்றோம்.

அந்தக் காலத்தில் நிறைவான வீதிகளோ, நிறைவான வைத்திய சேவைகளோ இல்லாத காரணத்தால், இவ்வாறு அழைத்துவரப்பட்ட பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களில், இரண்டரை லட்சம் பேர்வரையில் மரணித்தனர்எனவும்மலையக மக்களின் வரலாறு கள் கூறுகின்றன. அந்தவகையில் இவர் களுடைய வரலாறு வலி நிறைந்த வரலாறாகும்.

இவ்வாறு இவர்கள் இங்குவந்து 200ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இந்த மலையகமக்கள்இன்றளவும் பல இடங்களில் தரக்குறைவாக நடாத்தப்படுகின்ற, தரக்குறைவாக அழைக்கப்படுகின்ற மிக மோசமான சம்பவங்களை நாம் அவதானிக்கின்றோம். அவை மிகவும் கண்டிக்கப்படவேண்டிய விடயங்களாகும். அதேவேளை கடந்த 1964 ஆம் ஆண்டு ஸ்ரீமா, சாஸ்திரி ஒப்பந்தத்தில் எமது மலையகமக்கள் நாடுகடத்தப்பட்டனர்.

அவ்வாறு நாடுகடத்தப்பட்ட எமது மலையக உறவுகள் தற்போது இங்கு இருந்திருந்தால்தமிழ்சமூகம் மிகப்பெரியதொரு அந்தஸ்தை அடைந்திருக்கும்.

அதேவேளை இவ்வாறு நாடுகடத்தப்பட்ட மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசனின் தந்தையார் வி.பி.கணேசன் உள்ளிட்டவர்களும் நாடுகடத்தப்பட்டிருந்தால் இன்று மனோ கணேசன் போன்ற திறமையானவர்களை நாம் பெற்றிருக்க முடியாது.

அதேபோல் தற்போது இங்கிருந்து தமிழ்நாட்டுக்குச் சென்றுசிறப்பானதனது குரல் வளத்தால் அசானி என்ற மலையகச்சிறுமி பாடல்களைப் பாடி உலகையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றார். அவர்களுடைய குடும்பங்களும் இங்கிருந்து நாடுகடத்தப்பட்டிருந்தால் இவ்வாறானதொரு சிறந்த பாடகியை நாம் கண்டிருக்க முடியாது. இவ்வாறாக இன்னும்பலதிறமைவாய்ந்த மலையைக உறவுகள் இருக்கின்றார்கள்.

இவ்வாறாக மலையப் பகுதிகளிலும்,வடக்கு,கிழக்கில் எம்மோடும் இணைந்து வலிகளோடு வாழ்கின்ற மலையகத் தமிழர்களுடைய வலிக்கும், வடக்கு, கிழக்கு தமிழர்களுடைய வலிக்கும் ஒரு சிறந்த தீர்வு வேண்டும். அதற்காக இறைவன் துணை நிற்கவேண்டும்-என்றார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# ‘அடித்தால் திருப்பி அடியுங்கள்’ அது சட்ட வரம்புக்குட்பட்டதே

## மலையக மக்களுக்கு மனோ அறைகூவல்

மலையக மக்களை யாரேனும் தாக்கினால் அந்த வன்முறைக்கு எதிராகவும், தற்காத்துக்கொள்ளவும், திருப்பிதாக்குங்கள் என மனோகதேசன் மலையக மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மாத்தறையில், மலையக மக்கள் சிலர் தாக்கப்பட்டமை தொடர்பில் சுட்டிக்காட்டிப் பேசிய மனோகணேசன், அரசாங்கமும், சட்டமும் எங்களுக்கு பாதுகாப்பு தராவிட்டால் , எமது குடும்பத்தையும், சொத்தையும் பாதுகாக்க நாம் திருப்பி அடிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற ’மலையகத் தமிழ் மக்களுடைய 200வருட வரலாறு’ எனும் வரலாற்று நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

வன்முறையாளர்களுக்கு அடிதான் புரிகின்ற வார்த்தை எனில் அதை பேச நாம் தயார் என்பதை பொறுப்புடன் கூறி வைக்க விரும்புகிறேன்.

நீதியரசர் இளஞ்செழியன் தனது தீர்ப்பு ஒன்றில், தற்காப்புக்காக திருப்பி அடிக்கும் உரிமையின் சட்ட வரம்பு பற்றிக் கூறியுள்ளார். அதையே நான் இங்கு பிரதிபலிக்கிறேன்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மை பேச்சுக்கு அழைக்கிறார். ஆனால், நாம் பலமுறை சொல்லியும், அவரது அரசு, எமது மக்களுக்கு எதிராக பெருந்தோட்ட நிர்வாகங்கள் நடத்தும் அராஜகங்களைக் கண்டும் காணாமல் இருக்கிறது. ஆகவே பெருந்தோட்டங்களில் எமது மக்களின் இயல்பு வாழ்கைக்கு உத்தரவாதம் தராவிட்டால், தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனாதிபதியுடன் பேச்சில் கலந்துக்கொள்ளும் முடிவை மறுபரிசீலனை செய்யும் எனவும் அவர் இதன்போது தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (05)







# தமிழ்த் தேசிய எழுச்சிக்காய் அர்ப்பணித்தவர் குமாரசாமி

## அஞ்சலி உரையில் நிரோஷ்



தனது ஆற்றலை உத்தியோகத்துடன் மட்டும் மட்டுப்படுத்திவிடாது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வளர்ச்சிக்கு அர்ப்பணித்து சேவையாற்றிய மதிப்பிற்குரிய ஒருவராக அமரத்துவமடைந்த சங்கீதபூசணம் செல்லத்துரை குமாரசாமி மதிக்கப்படுகின்றார் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

‘பூத்தகொடி பூக்களின்றித் தவிக்கின்றது…..’ மற்றும் ’போரம்மா…..’ உள்ளிட்ட பல தாயக எழுச்சிப் பாடல்களை இசைத்துதவரும் ஓய்வுபெற்ற கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபருமான செ.குமாரசாமிக்கான இறுதி அஞ்சலி நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை தலைமையில் உடுப்பிட்டியில் நடைபெற்றது.

இதில் அஞ்சலியுரை ஆற்றுகையிலேயே வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களையும் உணர்வுகளையும் பகிர்வதற்கு எழுச்சிப் பாடல்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. ஓர் இனத்தின் அரசியல், விடுதலை, பொருளாதாரம், இனத்தின் அடையாளம், கலாசாரம், பண்பாடு என எதுவாக இருப்பினும் எதிர்காலத் தலைமுறைக்கு ஊடுகடத்துவதற்கு இசை முக்கிய மூலமாக அமைகின்றது.

இந் நிலையில் யதார்த்த பூர்வமாகத் தமிழ் மக்களின் விடுதலை உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் தேசிய பற்றுறுதியை கட்டிக் காப்பதிலும் அமரர் குமாரசாமி அவர்களுடைய பங்களிப்பு அளவிடமுடியாதது. அவர் ஓர் அரச கல்விச் சேவையாளராக ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபராக பதவி வகித்ததுடன் மட்டும் பணியை மட்டுப்படுத்திவிடாது தயாக உணர்வாளனாகவும் எங்களது சமயத்தையும் மொழியையும் வளப்படுத்தும் நல்ல ஒரு கலைஞனாகவும் தன்னுடைய வாழ்நாளை அர்ப்பணித்துள்ளார்.

இன்று அவர் மீளாத்துயில் கொள்கின்ற நிலையிலும் அவர் எமது மக்களுக்காக ஆற்றிய சேவைகள் என்றும் நினைவில் கொள்ளப்பட்ட வண்ணமே உள்ளன என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இந்த இறுதி அஞ்சலி நிகழ்வில் முன்னாள் கல்வி அதிகாரி நடராஜா அனந்தராஜ், கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளர்கள், அரச அதிகாரிகள், முன்னாள் போராளிகள், இசைத்துறை கலைஞர்கள், சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் எனப் பலரும் இறுதி அஞ்சலியுரை ஆற்றியமை குறிப்பிடத்தக்கது. (05)



# சித்த மருத்துவபீட அங்குரார்ப்பணம்

திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகு, சித்த மருத்துவ பீடமாக தரமுயர்த்தப்பட்டதையடுத்து, அதை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு திருமலை வளாக சித்த மருத்துவ பீடத்தில் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு திருகோணமலை வளாக முதல்வர் பேராசிரியர் ச.தேவதாசன், கிழக்கு மாகாண சுகாதார சுதேச அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கிழக்கு மாகாண சுதேசமருத்துவதிணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர், சித்த மருத்துவ பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் சோ.சுதர்சன் மற்றும் துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சித்த மருத்துவத்தின் தந்தையாக இருக்கின்ற அகஸ்திய முனிவரின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வு, சர்வமத அனுஷ்டானங்களுடன் சித்த மருத்துவ பீடத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

இதன்போது, சித்த மருத்துவத்தின் தோற்றம் பற்றியும், திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகு எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது, அதன் வளர்ச்சிப்படிகள் என்ன? இன்று பீடமாக தரமுயரக் காரணமானவர்கள் யார் என்பது பற்றியும் அதிதிகளால் பேசப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (05)

# கட்டார் தேசிய கிரிக்கெட் அணிக்கு தெரிவாகிய முஹம்மட் அஹ்னாபுக்கு ஹரீஸ் எம்.பி. வாழ்த்து



கல்முனை கமு/கமு/ஸாஹிரா தேசிய கல்லூரி மற்றும் கல்முனை கமு/கமு/அல் அஸ்ஹர் வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவனும், கல்முனை பிராந்திய முன்னணி கழகங்களில் ஒன்றான லெஜெண்ட்ஸ் விளையாட்டுக்கழக முன்னணி வீரர்களில் ஒருவராகவும், சிறு வயது முதல் கிரிக்கெட்டில் பல்துறைகளிலும் திறமையை வெளிக்காட்டிய முஹம்மட் அஹ்னாப் கட்டார் தேசிய கிரிக்கெட் அணிக்காக விளையாட தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி எனக்கு மட்டுமின்றி இலங்கைவாழ் சகலருக்கும் மகிழ்ச்சியளிக்கும் செய்தியாக அமைந்துள்ளது என விளையாட்டுத்துறை முன்னாள் பிரதியமைச்சரும், ஸ்ரீ ல.மு.கா பிரதித் தலைவருமான, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தான் பிரதிநிதித்துவப்படுத்திய கழகங்களின் பல்வேறு வெற்றிகளுக்கு காரணமாக அமைந்திருந்து சிறந்த வீரராக திகழ்ந்த இவர் கடின உழைப்பால் இந்தநிலையை அடைந்துள்ளார் என்பதே இங்கிருக்கும் நல்ல விடயம். இவர் மாவட்ட, மாகாண மட்டங்கள், மற்றும் தேசியத் தெரிவுகளில் முதன்மை காட்டி, கொழும்பு சாஹிரா கல்லூரி, கொழும்பு மூர்ஸ் அணி, கத்தார் உள்ளக அணி என பல போட்டிகளிலும் போராடி தனது திறமைகளை உச்சளவில் காட்டிய சிறந்த கிரிக்கெட் வீரர் என்பதை அறியும் போது மகிழ்ச்சியளிக்கிறது. சர்வதேச அளவில் தனது திறமையால் பிரகாசிக்க எம் மண்ணின் வீரரை பாராட்டுவதில் அகமகிழ்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (05)

# சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை சீருடை அறிமுகம்

சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் சீருடை அறிமுக நிகழ்வு சாய்ந்தமருது கமு/கமு/றியாழுல் ஜன்னா வித்தியாலத்தில் அகில இலங்கை ஜம்மிய்யத்துல் உலமா சபை சாய்ந்தமருது கிளையின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.சலீம் தலைமையில் இடம்பெற்றது.

ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவையின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான ஏ.எஸ். அஸ்வரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேரவைக்கான சீருடையை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நளிர், பேரவையின் மூத்த உலமா அஷ்செய்க் யூ.எல். அஸ்ரப் (தப்லிக்), ஒருங்கிணைப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஊர் பிரமுகர்கள் கலந்து கொண்டதோடு ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான ஊடகவியலாளர் யூ.கே. காலித்தீன் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

சீருடைக்கான அனுசரணையை மரணித்த தாயின் ஞாபகார்த்தமாக பொறியியளாலர் அலியார் ஸௌஃபர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மலையக மக்கள் உரிமைக்காக போராடுவது வடக்கு,கிழக்கு தமிழர்களின் கடமையாகும்

## செல்வம் அடைக்கலநாதன் இடித்துரைப்பு



மலையக மக்களின் உரிமைகளுக்காக குரல்கொடுப்பதும், போராடுவதும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் கடமை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வெள;வேறு இடங்களில் இருந்தாலும் உர்வுகளாலும், மொழியாலும் நாம் ஒன்றுபட்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற ‘மலையகத் தமிழ் மக்களுடைய 200 வருட வரலாறு’ எனும் வரலாற்று நூல் அறிமுக விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்திலே ஈழ விடுதலைப் போரிற்காக பல மலையக இளைஞர்கள் பெரும்பங்காற்றியிருந்த இடத்தில் நினைவு படுத்த விரும்புகின்றேன்.

வடக்கின் பல எல்லைக் கிராமங்கள் தற்போதும் தக்கவைக்கப்பட்டிருக்கின்றமைக்கு, அந்த எல்லைக்கிராமங்களில் குடியேற்றப்பட்டுவாழ்ந்துகொண்டிருக்கின்ற மலையக மக்களே காரணமாவர். மலையக மக்களாலேயே பல எல்லைக்கிராமங்கள் தற்போது சிங்கள மயமாக்கலில் இருந்து பாதுகாக்கப்படுகின்றது. இடங்கள்தான் வேறு உணர்வுகளும் மொழியும் ஒன்று என்பதை பல சந்தர்ப்பங்களிலே மலையக மக்கள் உணர்த்தியிருக்கின்றார்கள்.

மலையக மக்கள் ஒரு தேசிய இனம். அந்தத் தேசிய இனத்துக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளைத் தட்டிக் கேட்கவேண்டிய பொறுப்பும், கடமையும் எமக்கிருக்கின்றது.

மலையகமக்களின் அனைத்து விடயங்களும், எம்மோடு ஒன்றிணைந்து ஒத்துப்போகின்ற சூழல், நாம் அனைவரும் ஓர் இனம் என காட்டி நிற்கின்ற நிலையிலே அந்த மக்களுக்குரிய விடுதலையைப் பெற்றுக்கொடுக்கின்ற கடமையும் பொறுப்பும் எமக்கிருக்கின்றது.

மலையக மக்கள் இந்த நாட்டின் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் இந்த நாட்டில் வாழ்வதற்கான அனைத்து உரித்தும் அந்த மக்களுக்கு இருக்கிறது.

அவர்களுக்கு இங்கு நிலமில்லை. ஆனால் இந்த மண்ணைப் பாதுகாக்கப் போராடுகின்றனர்.

அவர்களுக்கு முறையான வேதனம் இல்லை. அவர்களுக்குரிய முறையான வேதனத்தைப் பெற்றுக்கொடுக்க அரசியல் தலைவர்கள் முயன்றாலும் இந்த அரசாங்கம் இடங்கொடுப்பதில்லை.

ஆகவே தேயிலைக் கொழுந்துகளை எடுத்து இந்த நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தவேண்டிய தேவை எமது மக்களுக்கு இல்லை. மலையக மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுப்பதும், மலையக மக்களின் உரிமைகளுக்காக அவர்களுடன் தோளோடு தோள் நின்று போராடுவதும், அவர்களுக்கான பங்களிப்புக்களைச் செய்வதும் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுடைய கடமை. - என்றார். (05)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.08.2023இல் வெளியிடப்பெற்றது.